Registered as a News Paper பக்கங்கள் 08 விலை: ரூபா 6.00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 12 (24 - 04 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை: 66

## தகைமையற்ற பலர் மொழி கற்பிப்பு

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகியமொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களில் 50 விகிதமானவர்களுக்கு அந்த மொழிகளைக் கற்பிக்கத் தகைமையில்லை என்று கல்வி அமைச்சு அண்மையில் மேற்கொண்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து தெரியவருகிறது. மொழிகளைக் கற்பிக்கத் திறமையில்லாத இந்த ஆசிரியர்கள் வேறு பாடங்களைக் கற்பிக்கத் தக்க அனுமதி வழங்குமாறு விண்ணப்பித்திருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது குறித்துக் கல்வி அமைச் (8ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்த நல்லெண்ண தூதுக்குழு புலிகளிடம் முன்வைத்த திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள பௌத்த நல்லெண்ண தூதுக்குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது தமிழரின் இனப்பிரச்சினை குறித்து சில யோசனைகள் அடங்கிய தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்தனர். மிகவும் சுருக்கமானதாக, ஆட்சி அதிகாரங்கள் எதுவும் குறிப்பிடாத முறையில் முன்வைக்கப்பட்டிருக்கும் இந்தத்திட்டம் தமிழரின் தாயகக் கோட்பாட்டை நிராகரிப்பதாக அமைந்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணத்தின் நிரந்தர இணைப்பிற்கு கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பையும் வலியுறுத்துகிறது.

இத் தீர்வுத் திட்டத்திற்கு விடுதலைப் புலிகள் சனியன்று பதிலளிக்கவுள்ளனர். எழுத்தில் தரப்பட்டிருக்கும் இந்த யோசனைகள் அடங்கிய திட்டத்தை கீழே தருகிறோம்.

1. இலங்கையிலுள்ள சகல இனத்தவரினதும் தனித்துவம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இந்தச் சமூகங்கள் மத்தியில் ஒற்றுமை நிலவ வேண்டும்.
2. பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டும் அவற்றிற்கு அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
3. 25,332 சதுரமைல் பரப்பைக் கொண்ட இலங்கை தீவு இங்கு வாழும் சகல பிரஜைகளுக்குமான பாரம்பரிய தாயகமாகக் கொள்ளப்பட வேண்டும். சிறுபான்மையர் தனித்துவம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
4. பிரதேச சபையினால் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் செனட் சபையில் அங்கத்துவம் பெறுவர்.
5. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மூன்று ஆண்டுகளுக்கு தற்காலிகமாக இணைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு நிரந் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதிக்கு பிக்குகள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் நேற்றுக்காலை யாழ் நகரப்பகுதிகளையும், மாலை வடமராட்சிப் பகுதியையும் சென்று பார்வையிட்டனர்.

நேற்றுக்காலை யாழ்.கோட்டைப்பகுதிக்குச் சென்று அங்குள்ள இடிபாடுகளைப் பார்வையிட்டனர்.

பேச்சு வார்த்தைகளின் பின்னர் வடமராட்சிக்கு சென்ற இத்தூதுக் குழுவினர் வல்வெட்டித்துறை பகுதிக்குச்சென்று அழிவுகளைப் பார்வையிட்டனர். அப்பொழுது பெருமளவு மக்கள் அப்பகுதியில் குழுமி அவர்களுடன் உரையாடினர்.

பின்னர் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தையும் தீருவிலில் உள்ள பன்னிரு வேங்கைகளின் நினைவுத்தூபியையும் இவர்கள் பார்வையிட்டனர்.

## தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தை சுமுகமான முறையில் ஆரம்பம்

யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ள பௌத்ததூதுக்குழுவிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே முதற்கட்ட பேச்சுவார்த்தைகள் நேற்று இடம்பெற்றுள்ளன.

நேற்று நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகள் ஒன்றரை மணித்தியாலத்திற்குமேல் நடைபெற்றன. இப்பேச்சு (8ஆம் பக்கம் பார்க்க)

# கொம்படியில் பாரிய குண்டுவெடிப்பு; 10 பயணிகள் பலி; 15 பேர் காயம்

## அரசு - துரோகிகள் கூட்டுச்சதி

(யாழ்ப்பாணம்)

கொம்படி பாதையில் வேம்படி என்னும் இடத்தில் நேற்று பிற்பகல் நடந்த பாரிய குண்டு வெடிப்பில் பத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் 15 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் சிறிலங்கா இராணுவமும் - தேசவிரோதக் கும்பல்களும் இணைந்து மேற்கொண்ட இத்தாக்குதலினால், இப்பகுதியில் இருந்த மூன்று கடைகளும் எரிந்து சாம்பலாயின.

இக் குண்டு வெடிப்பிற்கு பயணப் பொதியினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த பார்சல் குண்டே காரணம் எனத் தெரிய வருகிறது.

இக்குண்டுவெடிப்பில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் 11 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் ஏ.துரைசிங்கம்(54 வயது), செம்பியன் பற்று, தாளையடி, செ.இராசதுரை (43 வயது), செம்பியன் பற்று, தாளையடி, இ. தர்மகுலசிங்கம் (35வயது), ஆவரம் கண்டி, கண்டாவளை, இன்சிலி (15 வயது), செம்பியன் பற்று, தாளையடி, கே.ஆனந்தவடிவேல்(37வயது), பெரிய (8 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி, தீவக இராணுவம் பலத்த எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும் தீவகப்பகுதி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்தும் நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவத்தால் எறிகணை வீச்சுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகாலை மூன்று மணியளவில் பலாலியிலிருந்து வீசப்பட்ட எறிகணைகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன மூளாய் பகுதியில் கூடுதலான எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை தீவகப் பகுதியிலிருந்து வீசப்பட்ட எறிகணைகளும் மூளாய் பகுதியில் வீழ்ந்து வெடித்தன. எறிகணைகள் வீச்சு நடைபெற்ற வேளை உலங்கு வானூர்தி வட்டமிட்டுச் சென்றது.

## அவதானம் தேவை

தேசவிரோதசக்திகளின்சதி நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தேடுவாரற்றபொதிகள், பொருள்கள் என்பன குறித்து அவதானமாக இருக்கும் படியும் அவ்வாறு ஏதும் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் காணப்படின் தகவல் தருமாறும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

## தொண். ஆசிரியர் சிலருக்கு நிரந்தர நியமனம்

யாழ். மாவட்டத்தில் சில தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட விடயம் தொடர்பாக யாழ். கல்விப்பணிப்பாளருக்கு உத்தியோக பூர்வமாக தகவல் எதுவும் அறிவிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. கல்விச் சேவைகள் ஆணைக்குழுவினால் நேரடியாகவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. போட்டிப் பரீட்சை அல்லது களநிலை நேர்முகப் பரீட்சைகள் எதுவும் இன்றியே மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. வேலணைக் கல்விக் கோட்டத்தின் கீழ் பணியாற்றிய சில தொண்டர் ஆசிரியர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாககூறப்படுகிறது.

## அகதிகள் அனுப்பப்படுவது கவலை தருவதாக உள்ளது

### ஐ. நா- உயர் ஸ்தானிகர்

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வடகிழக்கு பகுதிகளுக்கு தமிழ் நாட்டிலுள்ள அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து அனைத்துலக அமைப்புகள் பல கவலை தெரிவித்துள்ளன இவற்றில் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகர் முக்கியமானவராவார்.

இந்த அகதிகளை திருப்பி அனுப்பும் செயற்பாட்டில் தாம் கலந்து கொள்வது குறித்து ஆலோசிக்க வேண்டியுள்ளதாக ஐ நா உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார் அகதிகள் பூரண சம்மதத்து (8ஆம் பக்கம் பார்க்க)

## சோலங்கி குறிப்பு விவகாரம்

# பிரதமரின் தொடர்புபற்றிய குற்றச்சாட்டை அரசு மறுப்பு

(டில்லி)

சர்ச்சைக்குரிய சோலங்கி குறிப்பு விவகாரத்தில் பிரதமர் பி.வி. நரசிம்மராவும் சம்பந்தப்பட்டுள்ளார். என்ற குற்றச்சாட்டை இந்திய மத்திய அரசு முற்றாக மறுத்துள்ளது.

போபர்ஸ் பீரங்கி பேர வழக்கு தொடர்பாக முன்னாள் வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி சுவீடன் அரசிடம் கையளித்ததாகக் கூறப்படும் குறிப்பு பற்றி பிரதமர் பி.வி. நரசிம்மராவிற்கு எதுவும் தெரியாது என்று நேற்றுமுன்தினம் இந்தியலோக சபையில் அரசு திட்டவட்டமாக அறிவித்தது.

இந்தச் சர்ச்சை பற்றி பிரதமர் நரசிம்மராவ் இன்று பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிடலாம் என்று பாராளுமன்ற விவகார அமைச்சர் குலாம்நபி ஆசாத் அறிவித்தார்.

இதற்கு முன்பாக எதிர்க்கட்சிகளின் கூச்சல் குழப்பத்தாலும், எதிர்க்கட்சிகளின் வெளிநடப்புகளாலும், ஒத்திவைப்புக்களாலும் சபை அலுவல்கள் சுமார் நான்கு மணி நேரம் தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது.


**Bata பாட்டா**

வடபகுதி மக்களின் நலன்கருதி
தற்பொழுது
வவுனியா நகரில்
மொத்த விற்பனை நிலையம்
ஆரம்பிக்கப்பட்டுள்ளது

**பாட்டா**

மொத்த விற்பனை நிலையம்
இல. 35, மில்ரோட், வவுனியா.

(2402)


## அனாதரவான பெட்டியினால் கொழும்பில் பரபரப்பு

(கொழும்பு)

பஞ்சிகாவத்தை ஆமர் வீதியில் அனாதரவாகக் கிடந்த பெட்டி ஒன்றினால் அப்பகுதியில் திங்களன்று காலை பலத்த பரபரப்பும், பீதியும் உண்டானது பாதசாரிகளும், போக்குவரத்தும் அப்பகுதியில் பொலிஸாரால் தடைசெய்யப்பட்டது.

குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் இராணுவக் குழு பெட்டியைப் பரிசோதித்த பின்பு, அது ஒரு உடுப்புப் பெட்டி என்று அறிவித்தது.

## வீதி விபத்துகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நடைபெற்ற இரு வெவ்வேறு வீதி விபத்துகளில் இருவர் பலத்த காயமடைந்துள்ளனர்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஜெயகாந்தன் (வயது37) என்பவர் நேற்று தனது மோட்டார்சைக்கிளில் மகளை ஏற்றிக் கொண்டு வரும் பொழுது இவ்விபத்து நடந்தது மோட்டார் சைக்கிளின் பின் ரயர் வெடித்ததே இவ்விபத்திற்குக் காரணமாகும். இவ்விபத்தினால் மேற்படி நபரின் கால் முறிந்து விட்டது. இவருடன் கூட இருந்த இவரது மகள் தெய்வாதீனமாக காயமெதுவும் இன்றி தப்பித்துக்கொண்டார்.

நேற்று யாழ். நகரப்பகுதியில் நடைபெற்ற மற்றுமோர் விபத்தில் எஸ். திருஞானசம்பந்தன் (வயது 32) என்பவர் பலத்த காயமடைந்துள்ளார். இவருடைய உடல் நிலை ஆபத்தான நிலையில் உள்ளதாக அறியவருகின்றது. (பா)


## இன்று ஆரம்பம்

யாழ் ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின்
வெள்ளி, பொன், பவள விழாக்களைச் சிறப்பிக்கும் முகமாக

**திருமறைக் கலாமன்றம்**

எடுக்கும்

# முத்தமிழ் விழா

1992 ஏப்ரல் 24, 25, 26
(வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்)

தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்

இடம்: மன்ற அரங்கு
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ உரையரங்கு ★ கவியரங்கு ★ இசையரங்கு
★ வழக்காடுமன்றம், ★ நடன நாடகம்,
★ மெல்லிசை, நாடகம்
போன்ற பல்சுவை நிகழ்ச்சிகளில்
வித்தகர்கள் கலந்து கொள்கிறார்கள்

அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்

பிரவேசம்: இலவசம் (சி-4313)



## கடல்புலிகளால் நடாத்தப்படும் மாபெரும் கடல் விளையாட்டுப் போட்டி

கடலிலே காவியம் படைத்து வீரச்சாவைத் தழுவிய கடற்புலிகளின் நினைவாக, சிதம்பரம், ஜெயந்தன் ஆகியோர் நினைவு நாளாகிய மே 4ம், 5ம் திகதிகளில் இப்போட்டி நடைபெறும்.

போட்டிகள் இரு வயதுப் பிரிவுகளாக நடைபெறும்

| 17 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் | 17 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் |
|---|---|
| 100 மீற்றர் நீச்சல் | 100 மீற்றர் நீச்சல் |
| 200 ,, ,, | 800 ,, ,, |
| 01 மைல் ,, | 05 மைல் ,, |
| 18 அடி சுழி ஓடுதல் | 21 அடி சுழி ஓடுதல் |
| 4X100 மீற்றர் அஞ்சல் நீச்சல் | 4X100 மீற்றர் அஞ்சல் நீச்சல் |
| | 2 பேர் கொண்ட கட்டுமரம் வலித்தல் (1000 மீற்றர்) |

### கழகங்களுக்கிடையேயான போட்டி

7 பேர் கொண்ட பந்து கடத்தும் போட்டி
இது இடுப்பளவு நீரில் நடைபெறும்

மேற்படி போட்டிகள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கும் தங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை கையளிப்பதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய இடங்கள்:

கடல் புலிகள் அரசியல் பிரிவு செயலகம் - மாதகல்
,, ,, ,, ,, - குருநகர்
,, ,, ,, ,, - தாளையடி
,, ,, ,, ,, - வல்வெட்டித்துறை

- விண்ணப்பங்கள் யாவும் 25-04-92 தொடக்கம் 30-04-92 வரை மேற்படி இடங்களில் நேரடியாகக் கையளிக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் கழக ரீதியாக தயாரிக்கப்பட்டு மேலுறையில் 'கடல் விளையாட்டுப் போட்டிகள்' எனக் குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.
- போட்டிகள் யாவும் தமிழீழ ரீதியில் நடாத்தப்படும்.

- விளையாட்டுத்துறை
கடல் புலிகள்

(சி-4316)



## நினைவுகூருகின்றோம்...
## 1992-04-24

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ **சண்டி** (கிருஷ்ணபிள்ளை செல்வநாயகம் - தம்பிலுவில், அம்பாறை)

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

★ **வேல்வேந்தன்** (எஸ். சுப்பிரமணியம் சித்தாண்டி - மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பு நரிப்புல் தோட்டம் பகுதியில் தேசவிரோதசக்திகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லதா** (மகேசன் ஞானச்சந்திரன் - மூன்றாம்ஒழுங்கை, வேலூர்குடியிருப்பு, கல்லடி, மட்டக்களப்பு)

தமிழீழக கடற்பரப்பில சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**முகமது** (இராசமாணிக்கம் ரவீந்திரன் - பாலாவிக்கடியேற்றம் பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

1988 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் கொலைசெய்யப்பட்ட

**நளினன்** (மணியம் தட்சணாமூர்த்தி - கிரான், மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொம்மாந்துறைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சூரி** (முத்துலிங்கம் பத்மநாதன் - கொம்மாந்துறை, செங்கலடி மட்டக்களப்பு)

இதே ஆண்டு இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல்போன யாழ் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய ஆசிரியரான செட்டிகுளம் வாசி

1989 ஆண்டு இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**சங்கர்** (கண்டி)

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் இந்தியப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**கப்டன் ரங்கன்** (துரைசிங்கம் ஜெயரங்கன் - புன்னாலைக் கட்டுவன் வடக்கு)

கிளிநொச்சியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்

**பாரத்** (கிளிநொச்சி)

இதே மாவட்டத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட உமையாள்புரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவனாகிய திரிவாசி

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்,

**விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி**

(சி/4315)




மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட போராளிகளின் சுய விபரக்கோவையை புரட்டிப் பார்த்தால் கல்வி என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இடத்திற்குநேரே பெரும்பாலும் எட்டாந்தரமோ அதற்குக் கீழோதான் காணப்படும். இவர்களது குடும்பங்கள் தங்கியிருக்கும் இடங்களை வீடு என்று சொல்ல முடியாது. தளபதி ஜோயிலிருந்து எல்லோரது நிலைமையும் அப்படித்தான் இவ்வாறானமிகக் கஷ்டமான குடும்பங்களிலொன்றிலிருந்து போராட்டத்திற்கு வந்தவன் தான் லத்தீப். கிரானைச் சேர்ந்த கந்தையா தம்பதியினரின் ஐந்து ஆண் பிள்ளைகளில் ஒருவனதான் சண்முகநாதன் என்ற லத்தீப், இவனுக்கு நான்கு சகோதரிகளும் இருந்தனர். குடும்பத்தின வறுமை நிலை இவன் தன் கல்வியை 7 ஆம் தரத்திற்கு மேல் தொடர அனுமதிக்கவில்லை இயக்கத்தில இணையும் வரை கூலி வேலைகள் செய்தான், தோட்டம் செய்தான், மிகக் கடுமையாக உழைத்தான்.

இவ்வாறாக மிகக் கடுமையான உழைப்பாளியாக இருப்பதனால் தான் மட்டக்களப்பு போராளிகள் ஒரு தாக்குதலுக்கு முப்பத்தைந்து தொடக்கம் ஐம்பது மைல்கள் வரை நடக்க வேண்டியிருந்தாலும் அலுத்துக் கொள்வதில்லை. ஆயுதங்கள், மேலதிக ரவைகள், முதலுதவிக்கான மருந்துகள், வழியில் எதிர்ப்படும் ஆறுகளைக் கடக்கத் தேவைப்படும கயிறுகள் மற்றும இன்னோரன்ன பொருட்களையும் சுமந்தபடி இவ்வளவு தூரம் நடந்து செல்வதென்றால் இலேசான காரியமல்ல.

சிங்கபுர, கள்ளிச்சை வடமுனை போன்ற மிக நீண்ட தூரத்தில் உள்ள இடங்களுக்கு சென்று தாக்குதல் நடத்தும் போது யாராவது காயப்பட்டால அதுமிகப்பெரிய சிரமம் காயப்பட்டவர்களையும் சுமந்து கொண்டு எதிர்ப்படும் ஆறுகளையுங் கடந்து வருவதற்கிடையில் சிலர் மரணிப்பர். தம்முடன் கூடிவாழ்ந்த போராடிய நண்பனுக்காக நின்று அழக்கூட நேரமிருக்காது. நடையின் வேகத்தை தளர்த்துவது ஏனைய காயப்பட்ட போராளிகளது உயிருக்கு பங்கம் விளைவிக்கலாம் ஆகையால் வைத்தியம் செய்யக் கூடிய பாதுகாப்பான பகுதியைச் செல்லும் வரை அதே நடை. இது அவர்களுக்கு பழக்கப்பட்டு விட்டது இப்படியான இடங்களுக்கு தாக்குதலுக்குச் செல்லும போது தங்களுடன் லத்தீப் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்கள் அவனது பகிடி-சேஷ்டைகளை ரசித்துக் கொண்டு வரும் போது நடையின் கஷ்டத்தை மறந்து விடுவார்கள். அதிலும் ஒருவரைப் போன்று பாவனை செய்தல், அவரைப் போலவே கதைத்தல் என்பன லத்தீப்புக்கு கை வந்த கலை. இயக்கத்தில் எவரையும் இவன் விட்டுவைப்பதில்லை எல்லோரைப் போலவும் கதைப்பான். ஆகவே நடந்தபடியே இவனது சேஷ்டைகளை ரசித்துக் கொண்டுசெல்வார்கள்.

எதிரியின் எல்லையைத் தேடிச்சென்று நடத்தப்படும் இத்தாக்குதல்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்



மேஜர் லத்தீப்

வளவு கஷ்டத்துக்கு இடையில் தாக்குதல்கள் செய்வது பெரும்பாலும் வெளியில் தெரியாது. வெளியுலகத்தைப் பொறுத்தவரை 'கள்ளிச்சை வடமுனையில் 20 இராணுவம் பலி 20 ஆயுதங்கள் மீட்பு' இவ்வாறாகத்தான் செய்தி இருக்கும். இந்தத் தாக்குதல்கள் எல்லாம் இல்லாவிடில் சிங்களக் குடியேற்றத்தால் மட்டக்களப்பு டவீகரம் செய்யப் பட்டிருக்கும். எமது போராட்டம் முனைப்படைய முன்னர் கடற்கரையோரமாக கல்குடா புன்னக்குடா என்று சிங்கள மீனவக் குடியேற்றங்கள்-மேற்குப்பக்கமாக வேப்பவெட்டுவான்வரை சிங்கள குடியேற்றவாசிகளின் கல்வாடி-ஏன் மட்டக்களப்பு நகர மரக்கறிச் சந்தை கூட குடியேற்றவாசிகளின் கையில் தான் இருந்தன லத்தீப்பின் இவ்வாறான தாக்குதல்கள் இல்லாவிடில்மட்டக்களப்பு-திருமலை மாவட்டங்கள் கூட சிங்களக் குடியேற்றங்களால் ஆண்டாடப்பட்டிருக்கும்;

சிறிலங்காப் படைகளுடனான இரண்டாம் கட்டப் போர் ஆரம்பித்த பின்னர் இடம்பெற்ற கல்முனைமுகாம் தாக்குதல்கள், அக்கரைப்பற்று காவல் நிலையத் தாக்குதல்கள் என்பன லத்தீப்பின திறமையை வெளிப்படுத்தின. தும்பங்கேணியில இவன் நடத்திய தாக்குதலுக்கு ஐந்துக்கும் மேற்பட்ட ஆறுகளைக் கடக்க வேண்டியிருந்தது. வெட்ட வெளிப் பிரதேசமான மண்முனைத்துறைப்பகுதியில் கூட சிறிலங்காப படைகள் மீது தாக்குதல்நடத்தினான் வெள்ளமோ வெளியோ புலிகளின் தாக்குதல் திறனை பாதிக்காது என்பதை புலப்படுத்தினான். எல்லா இடங்களிலும் ஆயுதங்களைக் கைப்பறறினான்.

இவன் மிகவும் அதிசயமான முறையில் தப்பியது தொப்பிகலமலையில இடம் பெற்ற இராணுவ முற்றுகையின் போது தான் அந்த முற்றுகையை முறியடிக்கும் நோக்கில் இவன 50 பேர் கொண்ட ஒரு குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றான். இராணுவ அணியொன்றை அடித்து விரட்டிக் கொண்டிருக்கையில் ஏற்கனவே அப்பகுதியில் இராணுவத்தினர் அமைத்திருந்த வியூகத்தினுள் இவனது குழுவினாகள் சிக்கிவிட்டனர் இராணுவத்தினரின் எரிகுண்டுகளினால் அப்பகுதியில் இருந்த இலுக்குப் புற்கள் பற்றியெரிந்தன எங்கும் நெருப்பு- புகை திசையே தெரியவில்லை. கடுமையான அந்தச் சண்டையில் இவன் தனது குழுவினரில் 22 பேரை இழந்தான். ஏனையோரை மிகச் சிரமத்தின மத்தியில் காப்பாற்றிக் கொண்டு வந்தான். அந்த முற்றுகையில் மிஞ்சியது இவனது அணி மட்டுமே. ஆகாயத்தில் போர் விமானங்கள். தரையில் நெருப்பு, எதிரே இராணுவம் இவற்றுக்குள்ளால் இவனது அணி தப்பி வந்த விதத்தை இன்றும் கதை கதையாகக் கூறுகின்றனர் மட்டக்களப்பு போராளிகள்.

தேவைகளை பூர்த்திசெய்து வாழ்வதைவிட இருப்பதைக் கொண்டு வாழ்வதே ஏற்றது என்பது இவனது நடைமுறை தனது போராளிகளுக்கு அடிக்கடி எமது பொருளாதார நிலைமையைச் சுட்டிக்காட்டுவான் தன்னைப் போலவே வாழப்பழக்குவான். வீரத்திலும் தன்னைப் போலவே அவர்களையும் உருவாக்கினான். அனுபவமே சிறந்த ஆசான் என்பதற்கு இவனது வாழ்க்கையே உதாரணம். போராட்டத்தைப் பற்றி இவன் விளக்கும் விதத்தை பார்க்கையில் இவன் ஏழாம் வகுப்பு படித்தவன் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஒரு பேராசிரியராகவே இவன் விளங்குவான்.

14-02-1992 அன்று ஆயித்தியமலை 6-ம் கட்டைப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்தவன் இவனே. தாக்குதலுக்கு செல்லும்முதல்வழக்கம்போல் கலகலப்பாகவேயிருந்தான். தங்களைச் சிரிக்க வைப்பது இதுதான் கடைசித்தரம் என்பது தெரியாமல் அனைவரும் அவனது சேஷ்டைகளை ரசித்துக் கொண்டிருந்தனர்.

நாய் மாதிரி குரைப்பான். சோம்பலுடன் நாய் எப்படி திரும்பிப் பார்ப்பது என்று அபிநயம் செய்வான். இவன் பயிற்சிக்காக வந்த காலத்திலிருந்தே இந்தச் சுபாவம் இருந்தது. இப்போது அணித்தலைவனாக வந்த பின்னர் கூட மாறவில்லை இனியும் மாறக்கூடாது என இவனது நண்பர்கள் நினைத்துக் கொண்டனர். அப்போதுதான் இவன் சொன்னான் 'இந்த தாக்குதலில் லத்தீப் திரும்பி வர மாட்டான் நீங்கலத்தீப்பிட்ட கேக்கிற தகவலைக் கேட்டுக்குங்க வேணுமெண்ட மாதிரி போட்டோ புடிச்சுக்குங்க' என்றான்.

விளையாட்டாக இவன் சொன்னது தமது வாழ்நாளில மறக்க முடியாததாக அமையும் என்று அப்போது எவருமே நினைக்கவில்லை.

அந்தத் தாக்குதலில் எதிரியின் 15 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன ஆனால் தாக்குதலின்ஆரம்பத்திலேயே வீரச்சாவெய்திய லத்தீப்பினதும் அவனது உடலைக் காப்பாற்றப் போய் வீரச்சாவடைந்தவர்களுமான 13 போராளிகளின் உடலகளைச்சுமந்து வரும் போது அவர்களின் மனம்-வீரச்சாவடைந்தவர்களின் புகமூடல்கள் எல்லாமே பாரமாகத்தான் இருந்தன அவனது நண்பர்களுக்கு, ஏனெனில் அன்று அந்தப் பயணத்தைக் கலகலப்பாக்கலத்தீப இல்லை.

இப்போதெல்லாம் மட்டக்களப்பு பிரதேச விசேட தளபதி "இந்த ஸீஸனில என்ன பகிடியடாப்பா" என்று கேட்பதில்லை அதைச் சொல்லத்தான் 'லத்தீப் இல்லையே - ஆம் இவன் மறைவுடன் சிரிப்பே வற்றிவிட்டது மட்டக்களப்பு மண்ணில்.

# வரட்சியினால் பரவும் கொலராவும் தடுப்பு முறைகளும்

கடுமையான வெயில் காலங்களிலும் வரட்சியினாலும் தண்ணீருக்குத் தட்டுப்பாடும் பஞ்சமும் ஏற்படும் போது அசுத்தமான சூழ்நிலை குறிப்பாக, பொதுமக்கள் செறிந்து வாழுகின்ற பகுதிகள், பட்டணங்கள், அகதிமுகாம்கள் போன்றவற்றில வயிற்றோட்டம் வாந்திபேதி போன்ற நோய்களை ஏற்படுத்துகின்ற "கொலரா" என்கின்ற நோய் வெகு விரைவாகப் பரவுகின்றது.

## "கொலரா"

"விப்ரியோ கொலரா" என்கிற வியாதி இரண்டு வகையான கிருமிகளினால் பரவுகிறது. இந்நோயை முதன் முதலில் 1961ஆம் ஆண்டிலேயே கண்டுபிடித்தார்கள் இந்தியாவிலுள்ள கங்கை ஆற்றுத் திடலில் ஆரம்பமான இந்நோய் பின்பு ஆசியாக் கண்டம் முழுவதும் பரவி ஆபிரிக்க நாடுகளுக்கும் பரவி இன்றும் மத்தியதரைக்கடல் நாடுகள், ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவில் கூட காணப்படுகிறது.

## பரவுகின்ற முறை

இந்நோய்க்கான கிருமிகள் தண்ணீர் மூலமே ஒருவரிலிருந்து இன்னொருவருக்குப் பரவுகின்றது அதாவது இந்நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு கடுமையான வயிற்றோட்டம் ஏற்படுகிறது. வயிற்றோட்டத்துடன் இந்நோய்க்குரிய கிருமிகள் வெளியேறுகின்றன. இவை கிணற்று நீரையோ அல்லது வேறு குடிநீரையோ அசுத்தப்படுத்துமாயின் அதன் மூலம் அந்நீரைக் குடிப்பவருக்கு 'கொலரா நோய்' ஏற்படுகிறது.

# மருத்துவம்

## கொலராவினால் ஏற்படும் பாதிப்புக்கள்

இவ்வாறு குடிநீருடன் உட்சென்ற கொலராக் கிருமிகள் உணவுக்குழாயின் முழுப்பகுதிக்கும் மிகவிரைவாக பரவுவதோடு பெருகுகிறது. ஆனாலும் இக்கிருமிகள் உணவுக்குழாயின் சுவரைக் கடந்து உடம்பின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வதில்லை. ஆனால் இதனால சுரக்கப்படுகின்ற ஒருவித நச்சுப்பொருள் உணவுக்குழாயின் சுவர்களில் ஒட்டிக்கொண்டிருப்பதால் உடலிலிருந்து பெருமளவு நீரையும், உப்பையும், கனிப்பொருளையும் உணவுக்கால்வாய்க்குள் உறிஞ்சுவதனால், இது வயிற்றோட்டமாக வெளியேறி பெருமளவில் நீரிழப்பை உடலுக்கு ஏற்படுத்துகிறது. இதனால் களைப்படைந்து மயக்க நிலையும் தோன்றும். உடனடி சிகிச்சைஅளிக்காவிட்டால் மரணம் கூட ஏற்படும்.

## சிகிச்சை முறை

இந்நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு வயிற்றோட்டம் தான் அடிக்கடி ஏற்படும். வாந்தியும் ஏற்படும் இதனால்பெருமளவில் நீரிழப்பு ஏற்படும். எனவே நீரிழப்பை ஈடுசெய்வதுதான் அடிப்படை சிகிச்சை முறையாகும் வாயினால் இளநீர், எலுமிச்சைச்சாறு, கஞ்சி, கொதிக்கவைத்து ஆறிய நீர் என்பனவற்றை பெருமளவில் குடிக்கவேண்டும். நோயினால் பாதிக்கப்படும் போது வாயினால் உட்கொள்ள விருப்பம் ஏற்படாது இதனால், மேலும் பாதிப்பு ஏற்படும். இவ்வாறான நிலைமைகளில் அண்மையிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்று ஊசி மூலம் 'சேலைன்' என்பன ஏற்றப்பட்டு நீரிழப்பு சரி செய்யப்படும் இதன் மூலம் உயிரிழப்பு தவிர்க்கப்படும் அத்துடன் 'டெற்றாசைக்கிளின்' போன்ற குளிசைகளும் கொடுக்கப்படும்.

## தடுப்பு முறைகள்

இந்நோய் அடிப்படையில் குடிதண்ணீர் மூலம் பரவுவதால், எப்போதும் கொதித்து ஆறவைத்த குடிதண்ணீரைப் பயன்படுத்துவது நன்று. குறிப்பாக பொதுஇடங்களில் காணப்படும் அசுத்தமான குளம், ஆறு, பழுதடைந்த கிணறு போன்றவற்றிலிருந்து பெறப்படுகின்ற நீரை நேரடியாககுடிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்நோயினால் ஒருவர் பாதிக்கப்பட்டு விட்டால் பொது இடங்களில் மலங்கழிப்பதை முற்றாக தவிர்க்கவேண்டும். அவர் உண்ணுகிற, குடிக்கின்ற எச்சங்களை குடும்பத்தில் ஏனையோர் உண்ணவோ குடிக்கவோ கூடாது. அவர் உண்ணுகிற, குடிக்கிற பாத்திரங்களை தனியாகப் பாவிக்க வேண்டும்.

கொலரா நோய் ஏற்படாமல் இருக்க கொலராவுக்கென 'தடுப்பூசி' உள்ளது ஆனாலும் இது மூன்று தொடக்கம் ஆறு மாதங்கள் வரையே தாக்குப் பிடிக்கும்.

எனவே மொத்தத்தில் சுத்தமாக இருப்பதனால் இந்நோய் பரவுவதை பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளலாம்.

மாறன்

# புத்தாண்டில் பூத்த கண்ணீர்

## சிறுகதை

அருணா புஸ்பராஜா

'பிள்ளை வருசப் பிறப்புக்கு இன்னும் நாலு நாள் தான் இருக்கு... வீடு வாசல் கழுவ வேணும்'

தேநீரை ஆற்றுவதற்காகச் சாயத்தை வடியால் வடித்துக் கொண்டு மலர் நிமிர்ந்து தாயைப் பார்த்தாள்.

'ம்.. போன வருசப் பிறப்புக்கு என்ரை அஞ்சு பிள்ளையளும் நிண்டுதுகள் ... இந்த வருசம் நீயும், சசியும் தான் நிக்கிறியள்...'

'இஞ்சாரும் பொன்னம்மா பெருமூச்சு விடாதை. அதுகள் மூண்டும் தாங்களிருக்கிற இடங்களிலை வருசப்பிறப்பை வடிவாக் கொண்டாடுங்கள் தானே. இஞ்சையிருந்தா உடுப்பெடுக்கக் கூடுமே. இல்லை .. எங்களுக்கும் தான் நிம்மதியிருக்குமே'

'ஓமப்பா அதுவும் சரி தான். அதுகள் மூண்டும் சந்தோசமாய், நிம்மதியாய் இருக்கிறதே காணும். இவன் சசியும் போட்டானெண்டால் தான் முழு நிம்மதியும்...'

'இந்த வருசத்தோடையாவது அவனுக்கு வெளியால போற பலன் கிடைக்கவேண்டுமெண்டு தான் கடவுளைக் கேக்கிறனான்'

'அது மட்டும் காணுமேயப்பா... இந்த பெட்டைக்கும் இருபது முடியப் போகுது.. இதுக்கும் ஒரு வழி பார்க்க வேணும்.. மூத்தவன் எழுதியிருந்த பெடியனையே பேசினால் என்னப்பா?...'

தேநீரை ஒவ்வொரு கோப்பைகளுக்குள்ளும் விட்ட மலர் எழுந்தாள அந்த பேச்சில் நாட்டம் காட்ட. விரும்பாது வெளி முற்றத்தில் போட்டிருந்த நாற்காலியில் போய் அமர்ந்து கொண்டாள். ஆனாலும், காற்றில் மிதந்து வந்த அவர்களது உரையாடல் காதினுள் விழுந்து கொண்டு தானிருந்தது.

அதுவரை, மௌனமாக இருந்த சிதம்பரம், வாயில் புகைந்து கொண்டிருந்த புகையிலையைக் கையில எடுத்து எச்சிலை எட்டி வெளியே துப்பினார்.

'எடி விசரி...பெடியனின்ரை படமும் பார்த்தாச்சு. வடிவான பெடியன் கை நிறைய கனடாவிலசம்பாதிக்கிறான் .. சீதனமும் வேண்டாமெண்டேக்கை எங்களுக்கென்ன கசக்குமே'

'அப்ப ஓமெண்டு சுரனுக்கு எழுதுவம்... மிச்சத்தை அந்தப் பெடியனோடை அவன் கதைப்பான் ... என்னப்பா சரியே'

'ஓமோம் அதை முதலில செய் பொன்னம்மா'

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ராஜ நடை நடந்து போகும் சிதம்பரத்தைக் கனடா பிரஜையின் வடிவில் கண்டாள் மலர்,

'பிள்ளை கொண்ணை ... எழுதியிருந்த பெடியன்ரை இடம் எது?... ஆ ஆ .. கொக்குவில் என்ன... ஏதோ இந்தப் புதுவருசம் உன்ரை வாழ்க்கையை நல்லா அமைச்சுக் .. குடுக்கட்டும்' என்ற பொன்னம்மா தேநீர் கோப்பையை எடுத்து மெலல உறிஞ்சினாள்.

'வெளிநாடு வெளிநாடென்று நொடிக்கு நூறு தரம் புலம்பும் அவர்களைப் பார்த்துத் தன் தலை தலையாக அடித்துக் கொண்டு குழற வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

'இந்தப் புது வருசம் உங்களை மாதிரி ஆனவர்களுக்கு சந்தோசமான வருசம். ஆனால் எனக்கு ..' என மனதுள் கூறிக் கொண்டவளது கண்கள் கலங்க ஆரம்பித்தன.

படலை திறக்கும் ஒலியைத் தொடர்ந்து சைக்கிளை உருட்டிய வாறே வந்தான் சசி.

'இனி உனக்கு எத்தினை மணிக்கு சசி கிளாஸ் வட்டியில் இடியப்பம் மூடி வைச்சிருக்கிறன் போட்டுச் சாப்பிடு .. போ ..'

'எனக்கெதுக்கு உங்கடை சாப்பாடு ... என்னோடை படிக்கிற பெடியனுக்கு, ஜேர்மனியிலயிருக்கிற அண்ணாட்டையிருந்து பக்கி ஜீன்ஸ், சேட்டெல்லாம வந்திருக்கு... என்ரை மூண்டு அண்ணாமாரும் இருக்குதுகள் தானே கனடாவையும் பிரான்சிலையும்'

கோபத்துடன் எடுத்தெறிந்த தம்பியை ஏறெடுத்துப் பார்த்தாள் மலர். ஏற்கனவே நொந்திருந்த இதயத்தை அவனது வார்த்தைகள் இன்னும் கீறி வேதனையை தந்தது.

'சரி...சரி அதுக்கேன் ராசா கொதிக்கிறாய். நான் காசு தாறன் உனக்கு பிடிச்ச உடுப்பை எடன் தம்பி'

கோபத்தால் சுருங்கி இருந்த முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது அவனிற்கு.

'சரியம்மா கிளாஸ் முடிஞ்சு ரெண்டு மணிக்கு வந்திடுவன .. காசை மறக்காமல் எடுத்து வைச்சிருங்கோ .. பிறகு வந்து சாப்பிடுறனம்மா' என்று கூறி விட்டு சைக்கிளில் ஏறியவன் மலரைப் பார்த்துச் சிரித்தான்.

'அக்காக்கென்ன கனடாக்கு நாளைக்குப் போடுவாள். இப்பவே கனவில மிதக்கிறாய் போல இருக்கு'

அதற்கு, 'போடா போக்கிரி ...' என்று கூறி வெட்கப்படும் தாயை அதிசயமாகப் பார்த்தாள் தம்பி எனக்குத் தானே சொன்னவன். அதற்கு இந்த அம்மா ஏன் நாணுகிறாள்?

வெளிநாட்டு மோகத்தில் ஊறிக்கிடக்கும் உள்ளங்களிற்கு இனிமேலாவது, இந்தப் புது வருடத்தோடாவது விடிவு ஏற்பட்டு விடுதலையை நேசிக்க ஆரம்பிக்க மாட்டாதா? என வினாவை எழுப்பியது அவளது உள்ளம்.

'அக்கா நான் சொல்லியும் கேக்காமல் கனவு காணுறாய் ... மிச்சக் கனவை கனடாவில போய் காண வேணும் ... மிச்சத்தை வைச்சிரு'

மனம் நிறைந்து ஏற்றுக் கொள்வேன் என்ற நோக்குடன் தவறாகக் கணிப்பிட்டு, மாறாக இதயத்தைக் குத்திக் கிழித்து விட்டுப் போகும் சசியை வேதனையோடும், பச்சாத்தாபத்தோடும் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

★ ★ ★

"இஞ்சாருங்கோப்பா சுரனின்ரை கடிதம் வந்திருக்கு"

துள்ளும் குதூகலத்துடன் வந்தாள பொன்னம்மா.

சுருட்டுப் புகைத்துக்கொண்டிருந்த சிதம்பரம் "என்ன எழுதியிருக்கிறான்" என்று கேட்டுவிட்டு மீண்டும் புகைவிட ஆரம்பித்தார்.

"இந்தக் கோதாரி விழுந்த சுருட்டை தூர எறியுங்கோ... பிள்ளையளுக்கு எழுதி விட்டால் உடலுக்குக் கேடு தராத சிகரெட்டாவது அனுப்பி விடுவாங்கள் ."

"சரி .. சரி புறுபுறுக்காமல் படி .."

"இந்த முறை புது வருசத்துக்கு தாங்கள் இல்லையெண்டதை நினைக்கச் சரியான கவலையாம் .. மலரைக் கெதிப் பண்ணி கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு வரட்டாம் ..."

சுவையான கருத்தமைந்து கண்ணீரின் நீரோட்டத்தோடு இசையமைத்து எழுதியிருந்த நாவல் ஒன்றில் மூழ்கியிருந்த மலர் திடுக்கிட்டுப் போனாள்.

விஷயம் இவ்வளவு தூரம் விபரீதமாகப் போய்க் கொண்டிருப்பதை நினைத்துப் புழுங்கினாள்.

அப்போது பக்கத்து வீட்டுக் கேற்றடியில் ஒரு வான் வந்து நிற்கும் ஒலி கேட்டு மனத்துடிப்போடு எழுந்து எட்டிப் பார்த்தாள். கையில் துப்பாக்கி பிடித்து. வானிலிருந்து இறங்கி வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்த தினேஸ் தெரிந்தான்.

அவனது கண்களும் ஒரு நிமிடம் அவளைச் சந்தித்து விட்டு மறைந்து விட்டது.

மலரது கண்கள் கண்ணீரைச் சொரிந்தன எனது உணர்வுகளிற்கு மதிப்பளிக்க, வீட்டவர் புரிந்து கொள்ளத் தயங்குகிறார்களே என்ற உணர்வு அவளுள் பூதாகாரமாக தலை காட்ட ஆரம்பித்தது.

புரிந்து கொண்ட இரு மனக்கதவுகள் முற்றாக விலகிக் கொள்ளத் தயங்கித் தயங்கி இலேசாக அசைந்து கொண்டிருந்தன. ஆனால ...

★ ★ ★

தமிழரின் வாழ்வில் நிம்மதியையும், சமாதானத்தையும் தீப ஒளியாக இந்தப் புதுவருடமாவது ஏற்றி வைக்கட்டும் என்று மானிடர் மனங்கள் புதுத் தெம்பை வரவழைத்துக் கூடிக் களிக்க, இன்று புத்தாண்டு பிறந்து புது வடிவம் பெற்றுக்கவதை எண்ணமிட்டவளாக தலை மயிரை வாரிச் சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள் மலர்.

"அக்கா இது எப்படியிருக்கு...வடிவாயிருக்கிறதே"

சிக்கெடுத்துக் கொண்டிருந்த மலர் தனது கண்களை சசியின் மேல் பதித்தாள் குழந்தைத் தனமாக புத்தாடை யணிந்து வினாவும் பதினெட்டு வயது இளைஞனைப் பார்த்தவளிற்கு துயரம் படலமிட்டது.

"பன்ரெண்டு வயசில என்ரை சிநேகிதி கமலான்ரை தம்பி களத்தில நிக்கிறான்...ஆனால் என்ரை தம்பியோ ..."

ஏமாற்றம் பெருமூச்சாக உதித்தது அவளுக்கு.

"இண்டைக்கு நீ கட்டாயம் புது உடுப்புப் போடத் தானே வேணும் ..."

"ஏனக்கா இண்டைக்குத் தானே வருசப் பிறப்பு"

"அங்காலை தியாகம் .... இங்காலை உன்னைப் போல ஆக்களுக்குக் கொண்டாட்டம்"

"கனக்கக் கதையாதை மலர் .. அவைமட்டும் போடேலையாக்கும் றோட்டில நிண்டுபார் புது உடுப்போட அவங்கள் போறது தெரியும்."

கேலியாகக் கூறும் தாயை திகைத்துப் போய்ப் பார்த்தாள். அறியாமையின் அவதாரமாக அவள் மலருக்குப் புலப்பட்டாள்.

"இண்டைக்கோ நாளைக்கோ எண்டு அதுகளின்ரை உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கு . அதுகளின்ரை எல்லா ஆசைகளும் முற்றாக பூர்த்தியாகிறதில்லையம்மா .. ஆனா சசியைப் போல பெடியள் புது உடுப்புப் போட்டுக் கொண்டு சைக்கிளில சுதுமாரி குத்திக் கொண்டு திரியினம் புது உடுப்புப் போட்டது குற்றமில்லை .. இப்ப நீங்கள் உணராமல் கதைச்சது தான் பெரிய பிழை . மண்ணுக்குத் தன்னை அர்ப்பணிச்சவன் புது உடுப்பும் போடுறதில என்னம்மா பிழையிருக்கு? இருக்கு மட்டும் அதுகள் குதூகலமா இருக்கிற உங்கடை கண்ணுக்குக் குத்துதே... ஆனால் ஒண்டு மட்டும் உண்மை. ஒரு போராளிக்குக் களத்துக்குப் போகேக்கை இருக்கிற சந்தோசமும், மன நிறைவும்புதுஉடுப்புப் போடேக்கை இருக்கிறேல்லையம்மா..."

மனம் விட்டுக் கூறவில்லை. நினைத்துக் கொண்டாள். கனடா பிரஜைகளாகத் தோற்றம் தர விரும்புவோருக்கு இதையெல்லாம் கூறி பிரயோசனமில்லை என்று தான் அவள் நினைத்தாள்.

"சரி பேசாமலிருங்கோம்மா... அடுத்த வருசம் அக்கா கனடாவில தான் நிப்பள்... அதுதான் அக்காக்கு ஆசையான நதியாச் சட்டை எடுத்தனான் .. பிடிச்சிருக்கே .."

சினிமாத் தாரகையின் உடலை அலங்கரித்த ஆடையின் அச்சில் உருவாகியிருந்த ஆடையைப் பார்த்து அவள் மனம் வெறுப்பால் முக்காடிட்டது.

"இண்டைக்குஎத்தினைவீடுகளில வேதனை தூமிடுக் கொண்டிருக்கும் எத்தினை நெஞ்சங்கள் மாவீரராய் படத்திலசிரித்துக் கொண்டிருக்கும் போராளிளைப் பார்த்து அழுது கொண்டிருக்கு .."

மலரின் கண்கள் கலங்க ஆயத்தமாகியது.

"ஏதடா இது வடிவாயிருக்கு உனக்கும் அக்காக்கு ஏத்தமாதிரி எடுக்கத் தெரியுது"

"பின்ன என்ன பொன்னம்மா வெளிநாட்டுக்கு நாளைக்குப் போகப் போற அக்காக்கு ஆசையா எடுத்திருக்கிறன் ..."

அதற்கு மேல் மலருக்குக் கேட்கப் பொறுமையிலாது போய் விட்டது

"நிப்பாட்டுங்கோ .. எதுக்கெடுத்தாலும் வெளிநாட்டுக் கதை தானே உங்களிற்கு .. ஏதோ கனடாவில பிறந்த நினைப்பு இங்கை எத்தின பெடியள் பெட்டையள் நாட்டுக்காகச் செத்துக் கொண்டிருக்குதுகள் அதையெல்லாம் நினைச்சுப் பார்க்க உங்களுக்கு ஏது நேரம் ."

உள்ளே குமுறிக் கொண்டிருந்த எரிமலை பொன்று வெடித்துச் சிதறுவதை உணர்ந்து திகைத்து நின்றனர் கனவனும் மனைவியும்

"உனக்கும் தானடா சசி... பத்து வயதுக் குழந்தையள் களத்தில நிக்கிற நேரத்தில உனக்கு, பக்கி ஜீன்சும், சேட்டும் தானே நினைவு... இப்ப சொல்லுறன் கேட்டுக் கொள்ளுங்கோ... வெளிநாட்டுக்காரனுக்கு மட்டும் என்னைத் தாரை வார்க்கலாம் எண்டு மட்டும் கனவு காணாதேங்கோ. அதைவிட நஞ்சு வேண்டித்தந்திடுங்கோ. நிம்மதியாச் செத்துப்போறன் "

பொன்னம்மாவுக்கும், சிதம்பரத்துக்கும் கனடாக் கற்பனை மடமடவென்று இடிந்து அவர்களது தலைமேல் விழுவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.

வெளிநாட்டு மோகம் மூண்டு அண்ணாமாரோடையே போகட்டும் எனக்கும் உனக்கும் வேண்டாமடா சசி..."

குமுறி அழும் மலரைப் பார்த்து மூன்று சோடிக் கண்களும் நிலை குத்தி நின்று கொண்டிருந்தன.

அப்போது பக்கத்து வீட்டில் வாகனமொன்று வந்து நிற்கும் ஒலி நொந்தவளது இதயத்தைக் குளிர வைத்து கண்களை அங்கே ஓடச் செய்தது. சிரித்த முகத்துடன் இறங்கும் தினேசின் முகத்தைக் கண்டு பெருமித உணர்வும் வேதனையும் மனத்தைப் பக்கம் பக்கமாக வதைத்தது. கண்களினூடாக மீண்டும் கண்ணீர் மடை திறந்தது.

அவளது அசைவுகள் முத்தாகத் திரண்டோடும் கண்ணீர் சசிக்கு ஏதோ ஒன்றை உணர்த்தியது. நெஞ்சம் நெகிழ சகோதரியைப் பார்த்தான். புரிந்துணர்வின் எல்லையை அடைந்தவனாக தனது உடலைக் கவ்விப் பிடித்திருந்த புதிய ஆடைகளை வெறுப்போடு குனிந்து பார்த்துக் கொண்டே கையில் பிடித்திருந்த நதியாச் சட்டையைத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா அரசின்

பான தாக்க பூர்வ நிலையாகும். அதேவேளை வெளிநாட்டு அழுத்தங்களுக்கும் உள்நாட்டில தேர்தல்நோக்கு நிலையில் இருந்தும் பிரச்சினையை மென்மைப்படுத்த வேண்டிய ஒரு தேவை பிரேமாவுக்கு உண்டு. இத்தகைய இரண்டக நிலையில் வளர்ச்சியடைந்துவரும் இராணுவக் கண்ணோட்டம் ஒரு புறமும் அரசியல் அழுத்தங்களுக்கும் அரசியல் தேவைகளுக்கும் முகங்கொடுக்கின்ற சமாதான தேவைகள் இன்னொரு புறமுமாக பிரேமா அரசு உள்ளது. இத்தகைய இருதலைக் கொள்ளி நிலை இலங்கை அரசாங்கத்தின சகல செயல்களிலும் தொனிக்கிறது. முற்பட்ட ஒப்பந்த காலகட்டத்தில் எலலாம இத்தகைய இருதலை நிலையிலலாது ஒரு புறம் சுயநெருக்கடியும் மறு புறம் போலித தீர்வுகளும் என்ற வெட்டொன்று துண்டு இரண்டான பாதை இப்போதைய அரசுக்கில்லை.

இத்தகைய பின்னணியில் பார்க்கும்போது தமிழர்களை தமது தேவைகளுக்கு தீனியாகப் பாவிக்கும் நிலைக்குப் பதிலாக தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நிலைக்கு வரவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினையை அரசு தீர்க்க விரும்புமானால் அரசே தீர்வை முன்வைக்கவும் வேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின கீழான தீர்வு தமிழருக்கு போதாது என்று கூறிய புலிகள் அவ்வொப்பந்தத்துடன் முரண்பட்டனர். இறுதியில் அவ்வொப்பந்தத்தின்கீழ் அதனை எதிர்த்து யுத்தத்தில் ஈடுபடலாயினர். புலிகள் இலங்கை - இந்திய அரசுகளின் ஒப்பந்தத்தை மீறியே அந்த யுத்தத்தில் ஈடுபட்டபோது இலங்கை அரசு புலிகளுடன்பேசி பிரச்சினையைத் தீர்க்கத்தயாரானது புலிகளுடன் இலங்கை அரசு பேசத் தயாரானமை என்பது அவ்வொப்பந்தத்தை விடவும் தாம் மேலதிகமாகத் தரத் தயார் என்பதையே குறிக்கும் இந்நிலையில்பேச்சுவார்த்தை பற்றியோ அல்லது தீர்வுத்திட்டம்பற்றியோ பேசுவதென்பது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைவிடவும் அதிகமான உரிமைகளைக்கொண்டதென்ற வகையிலேயே அமையலாம். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை புலிகள் நிராகரித்துள்ள நிலையில் அதனை விடக்கூடுதலான ஒரு தீர்வை முன்வைக்கவேண்டிய பொறுப்பு இலங்கையரசுக்கே உண்டு புலிகள் தமது கூடியபட்சத் தீர்வாகத் தமிழீழத்தைக் குறிப்பிடுகின்றனர். ஆயினும் இலங்கை அரசு சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பினால் அது முன்வைக்கும் திட்டத்தை தாம் பரிசீலிக்கத் தயாரெனப் புலிகள் அறிவித்துள்ள நிலையில் இலங்கை அரசு உருப்படியான திட்டத்தை முன்வைக்கவேண்டிய பொறுப்பில் உள்ளது.

இராணுவரீதியில் தமிழ் மக்களை அரசு தோற்கடிப்பதென்பது சாத்தியப்படாது. இதனைக் கடந்த 20 ஆண்டு காலப் போராட்டம் நிரூபித்து நிற்கின்றது. தற்போது இராணுவம் இலங்கை அரசியலில் ஒரு சக்தியாக உருப்பெற்றுள்ள நிலையில் தமது பதவி உயர்வுகளுக்கான ஒரு களமாக இராணுவத்தினர் தமிழ் மண்ணைக் கருதுகின்றனர். இதனால் இராணுவத்தினர் மத்தியில் இழுபறிகளும் போட்டிகளும் நிலவுகின்றன. இது முற்றிலும் ஒரு தவறான அணுகுமுறையும் கண்ணோட்டமுமாகும். இவற்றிற்கு அப்பால் ஆக்கபூர்வமான வழியில் சிந்திக்க வேண்டியது ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தமிழ் மக்களின் கண்ணோட்டத்திலிருந்து அணுகாதவரை அது ஆக்கபூர்வமான சிந்தனையாக அமைய முடியாது.

# பிரேமா அரசின் இரண்டக நிலை

மு. திருநாவுக்கரசு

தமிழ் மக்களின் பிரச்சினைக்குச் சிங்கள அரசு எத்தகைய தீர்வொன்றினை முன்வைக்கத் தயாராய் உள்ளது? இதுவே இப்போதுள்ள பிரதான கேள்வி.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டுமென்ற சர்ச்சை தென் இலங்கையில் எழுந்துள்ளது மங்கள முனசிங்கா தலைமையிலான தெரிவுக் குழுவுக்கு புலிகள் சாட்சியம் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் எழுந்திருந்தது ஆனால் இவை சம்பந்தமாக விடுதலைப் புலிகள் இயக்கமானது தமது உத்தியோக பூர்வ பத்திரிகையாகிய இம்மாத (ஏப்ரல்) விடுதலைப்புலிகள் இதழில் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் தீர்வுத்திட்டத்தைப் புலிகள் முன்வைக்கவேண்டிய அவசியமில்லை என்ற அபிப்பிராயத்தை முன்வைத்துள்ளனர். ஆய்வுத்தரம் (Academic Stand -erd) வாய்ந்த ரீதியில எழுதப்பட்ட அவ்வாசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"தமிழர்களின் உரிமைக்காகப்போராடி வரும்விடுதலைப் புலிகளிடம் ஒரு தீர்வுத் திட்டம் இல்லாமலில்லை தமிழீழத் தனியரசு தான் அந்தத் தீர்வு இந்தத் தீர்வைச் சிங்கள ஆளும் வர்க்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. அப்படியானால், மாற்றுத் தீர்வை முன்வைப்பது அவர்களது கடப்பாடு ஆகும். அப்படி வைக்கப்படும் மாற்றுத் தீர்வு தமிழீழ மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா என்பதை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்யத் தயார். இது தான் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.";

பேச்சுவார்த்தை சம்பந்தமாக வெளிநாட்டு அழுத்தங்களையும் உள்நாட்டு நெருக்கடிகளையும் சுட்டிக்காட்டியுள்ள அவ்வாசிரிய தலையங்கமானது பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய பொறுப்பு சிங்கள அரசுக்கேயுண்டு என்பதையும் வலியுறுத்தியுள்ளது.

பொதுவாகத் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக கடந்த காலத்தில் சிங்கள அரசு கடைப்பிடித்து வந்த போக்கினையும் இன்றைய நிலையில் தென்னிலங்கை அரசியல் நிலைவரங்களையும் விளங்கிக் கொண்டு அதில் தமிழ் மக்கள் பக்கத்திலான நிலைப்பாடு எவ்வாறு அமையலாம் என்பதைக் கண்டு கொள்வதே பொருத்தமுடையதாகும்.

தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றனர் என்பதை தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கும் விடுதலைப் புலிகள் இயக்கம் பகிரங்கமாக அறிவித்துள்ளது. அதற்கு முன்னோடியாக பல நல்லெண்ண நடவடிக்கைகளை அது வெளிக்காட்டியுமுள்ளது ஆகவே இதனைப் பயன்படுத்தி ஒரு தீர்வைக் காண வேண்டிய பொறுப்பு சிங்கள அரசுக்கேயுண்டு. தமிழர்கள் கேட்பதை சிங்களவர்கள் கொடுப்பதில்லை. எனவே என்னவேண்டுமென்று இப்போது புலிகள் கேட்க முடியாது. என்ன உரிமைகளைக் கொடுக்கப் போகிறோம் என்பதை சிங்களவர்களே கூற வேண்டும். அது போதுமா அல்லவா என்பதைப் புலிகள் பின்பு கூறலாம். புலிகள் தமக்கென்றொரு தீர்வைக் கூறி விட்டார்கள். அது தமிழீழம் என்பதே. ஆனால் அரசு தமிழ் மக்களைத் திருப்திப் படுத்தக் கூடிய வேறோர் தீர்வினை முன்வைத்தால் தாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயாராய் உள்ளோம் என்பதே புலிகளின் நிலைப்பாடு. நிலைமை இவ்வாறிருக்க தீர்வுத் திட்டமொன்றைப் புலிகளே முன்வைக்கவேண்டுமென்று கோருவது யதார்த்தத்துக்கு முரணானதும் தர்க்கத்துக்கு அப்பாற்பட்டதுமாகும்.

இவற்றின் பின்னணியையும் அரசியல் போக்கையும் விளங்கிக் கொள்ள கடந்த கால அரசியல் வரலாற்றினைப் பரிசீலனை செய்வது சாலச் சிறந்ததாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணும் வகையில் காலத்திற்குக் காலம் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்த் தலைவருடன் உடன்பாட்டிற்கு வந்தார்கள். ஆனால் உடன்பாட்டிற்கு வந்த ஒவ்வொரு கட்டத்திலும் சிங்களத் தலைவர்கள் தாமாக ஒரு தீர்வை முன்வைக்கவில்லை. மாறாக தமிழ்த் தலைவர்கள் ஒரு தீர்வை முன் வைத்த போது அதற்குக் குறைந்த பட்ச தீர்வாகச் சிங்களத் தலைவர்கள் சில உடன்பாடுகளுக்கு வந்தார்கள் அவ்வாறான குறைந்தபட்சஉடன்பாடுகளுக்குக்கூட தாம் பல முறும் கட்டங்களில் அதை நிராகரித்து விட்டார்கள் குறிப்பாக செல்வா -- பண்டா ஒப்பந்தம், டட்லி -- செல்வா ஒப்பந்தம், இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஆகியவற்றை இப்பின்னணியில வைத்துப் பரிசீலனை செய்வது அவசியம் மேற்படி ஒப்பந்தங்களின் அரசியல் பின்னணி பற்றியும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட முறைகள் பற்றியும் இவ்வொப்பந்தங்களில் சம்பந்தப்பட்டவர்களின் நோக்கு நிலைகள் அவர்களால் ஒப்பந்த உருவாக்கலின் போது வெளியிடப்பட்ட கருத்துகள் பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் ஆய்வுகள் வெளிவராதிருப்பது துரதிர்ஷ்டமானது அரசியலரீதியான அறிவியல். அனுபவத்தொகுப்பை இது குறைத்து விட்டதென்றே சொல்லலாம். இச்சிறுகட்டுரையானது மேற்படி ஒப்பந்தங்களின்முழுஉள்ளோட்டங்களையும்காட்ட முடியாத நிலையில் ஒப்பந்தங்கள் பற்றிய மேலெழுந்தவாரியான அரசியல் பின்னணியை மட்டும் விபரிக்க முற்படுகிறது அது இன்றைய அரசியல் சூழலை விளங்க ஓரளவு உதவக்கூடும்.

பண்டாரநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது அவருக்கிருந்த பிரதான பிரச்சினை நிலைபெற்றிருந்த ஐதேக சார்பு அரசுயந்திரத்திலிருந்து தனது அரசாங்கத்தைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதே சுதந்திரத்திற்கு முன்பிருந்தே ஐ.தே.க சார்புநிலையில் அரசுயந்திரம் அமைக்கப்பட்டிருந்து தொடர்ந்து 10 வருடங்கள் ஐதேகவின் ஆட்சியே இலங்கையில் நிலவியது. பொலிஸ் இராணுவம் மற்றும் நிர்வாக இயந்திரம் எல்லாம் ஐதேக சார்பாகவே இருந்தன கிறிஸ்தவ மிஷன் மற்றும் வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் என்பவற்றுக்கு எதிரானபோக்குடையவராக பண்டார நாயக்கா காணப்பட்டார். இவற்றால் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் பண்டாரநாயக்காவுக்கு பலமான எதிர்ப்பு இருந்தது இவற்றினை எல்லாம் சமாளிக்க தமிழின எதிர்ப்பு அரசியலையே பண்டாரநாயக்கா மூலோபாயமாகக்கொண்டார். அது பரந்த சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்கஉதவுமென நினைத்தார்.

56-ல் பண்டாரநாயக்கா பதவிக்கு வந்த பின்பு தனிச் சிங்கள சட்டத்தை நிறைவேற்றினார் அதற்கெதிராக தமிழரசுக்கட்சி திருமலை யாத்திரையை நடாத்தியது. திருமலையாத்திரையைச் சாட்டாக வைத்துக் கொண்டு தமிழர் படையெடுப்பை முறியடிப்பதாகக் கூறி பண்டாரநாயக்கா ஒரு லட்சம் தொண்டர்படையை சேர்த்தார். இத் தொண்டர் படைக்கு ஆயுதப் பயிற்சியளிப்பதும் ஒரு திட்டமாகும் இத்தொண்டர்படையைப் படிப்படியாகப் பொலிஸாகவும் இராணுவமாகவும் மாற்றுவதே பண்டாரநாயக்காவின் திட்டமாகும்.

இத் தொண்டர் படைபற்றி அக்காலத்தில் ஜே ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்த கருத்து முக்கியமானது. இத் தொண்டர் படையை சுகாதாமி என ஜே. ஆர். வர்ணித்தார். அந்த அடிப்படையில் தொண்டர்படை அமைப்பை ஐதேக. வன்மையாக எதிர்த்தது. உண்மையில் பண்டாரநாயக்காவின் உள்நோக்கம் என்னவெனில் நீண்டகாலத்தில் நிலைநிறுத்தப்பட்டிருந்த ஐதேக சார்பு இராணுவம் பொலிஸ் மற்றும் அரசு இயந்திரத்திற்கு எதிராக சு.க சார்பு இராணுவ பொலிஸ் அரசுயந்திரத்தை அமைப்பதேயாகும் ஆயினும் ஐ.தே.க வின் எதிர் நடவடிக்கையினால் இத்திட்டம் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் பண்டாரநாயக்காவின் திட்டம் தோல்வியில் முடிவடைந்து அவர் தான் எதிர்பார்த்தபலத்தை இழந்திருந்தார். தமிழரசுக் கட்சி தன் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்காக அரசாங்கத்துக்குக் கொடுத்திருந்த ஒரு வருடகால அவகாசம் முடிவடையும் கட்டம் பண்டாரநாயக்காவிற்குப் பல வகையிலும் தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலம். எம் இபி அரசாங்கத்துக்குள் பிளவு உருக்கொண்டகாலம். ஐ.தே கவினதும் வெளிநாட்டு நிறுவனங்களதும் கிறிஸ்தவ மிஷன்களதும் நெருக்கடிகள் மேலோங்கியகாலம் இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவது பண்டாவுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலை இருந்தது. எனவே பண்டா தன் தென்னிலங்கை நெருக்கடிகளின் நிமித்தம் செல்வாவுடன் ஓர் சமரசத்துக்கு வரத்தயாரானார் இப்பின்னணியில் தான்பண்டா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பிரெஞ்சின் புரட்சிக் கீதம் வெறுப்பைத் தூண்டும் பாடலா?

உயிருள்ளவர்களைத் தட்டி எழுப்புவதும் இறந்தவர்களுக்கு உணவு ஊட்டுவதும் எனக் கணிக்கப்பட்ட பாடல் ஒன்று இருக்குமானால் அது உண்மையில் பிரெஞ்சு தேசிய கீதமான மார்சேயிசாகத்தான் இருக்கும். அப்பாடல் பிரெஞ்சு மக்களை உற்சாகமூட்டி பிரசிய எதிரிப் படைகளை விரட்டவும், பாரிசை நோக்கி வீர நடை போடவும் அரசனைத் தூக்கி எறியவும் ஐரோப்பிய மக்களை புரட்சி நோக்கி தூண்டிவிடவும் உதவியது அது 200 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. துரோகிகளுக்கு எதிரான வீராவேசத் துடிப்பும் "களப்பு குருதி கொண்ட எதிரிகளின் குருதியைக் கொண்டு எமது வயல்களை நனை" என்ற தாய்நாட்டுப் பற்றுக் கொண்ட அப்பாட்டின் பதங்கள் அரசியல் பிழை கண்டு பிடிப்பவர்களினால் தாக்கத்துக்குள்ளாகியுள்ளது.

குளோட் யோசப் றூக்கற் டி.லிஸ்லி (Clade- Joseph Rouget De Lisle) என்ற படை வீரன் ஒருவனால் 1792 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் ஒரே இரவில் அகத்தூண்டுதலால் உந்தப்பட்டு எழுதப்பட்ட இப்பயங்கரப் பாடலை பவெட்டித் துண்டாடி மாற்ற வேண்டுமென்ற கருத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கருவுற்றது. பிரெஞ்சு மனித உரிமைவாதி அபே பீரி என்பவர் "வெறுப்பு உணர்ச்சியைத் தூண்டுவதிலிருந்து அன்பைப் பொழியும்" பாடலாக இக்கீதத்தை மாற்ற வேண்டும் என்று கூறினார், அவர் கேட்ட அன்பான மிருதுவான மாற்றம் முதலில் எடுபடவில்லை. ஆனால் கடந்த மாதம் பத்து வயதுச் சிறுமி ஒருவர் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் போது "மக்களே ஆயுதங்களை எடுங்கள்" எனப்பாடியது தேசிய ரீதியான சர்ச்சையை உண்டாக்கியுள்ளது. மார்சேயில்ஸ்க்கான தோழமைக் குழு என்ற அமைப்பின் வழி நடத்தலின் கீழ் திருத்தம் வேண்டுபவர்களின் தாக்குதல் உருப்பெற்றுள்ளது. அவர்கள் சரடு முரடு கொண்ட கடும் சொற்களை நீக்கிய மாற்றம் வேண்டுமென்று விண்ணப்பித்துள்ளார்கள். இந்தக் குழு நாட்டின் முதல் பெண்மணி டானியல் மிற்றன்ட் அம்மையார் உதைப்பந்தாட்ட வீரன் மிக்கல் பினாற்றினி ஆகியோரின் தலைமையில் உள்ளது. அவர்கள் முன்னாள் நெருப்பணைக்கும் வீரராயிருந்து பின்னர் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஆர்மண்ட் துயோர் என்பவரின் முடிவை எடுத்துக் காட்டுகின்றார்கள். அவர் 175 தேசிய கீதங்களை மிகுந்த ஆழமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தி உலகநாடுகளிடையே பிரான்சு தான் ஒரு போர் அவாக்கொண்ட தேசிய கீதத்தைத் தேர்ந்து தொடர்ந்து வைத்திருக்கும் நாடு; என ஒப்புதல் செய்துள்ளார்.

அப்படியா? டென்மார்க்கைப் பார்த்தால் அவர்களின் கீதம் கிறிசுரியன் அரசனின் வீரதீரத்தைக் கூறி அவரின் வாள் கோதிக் முடிகளுக்கும் மூளைகளுக்கூடாகவும் வேகமாகப் பயச்சப்படுகிறது என்று விபரிக்கின்றார் சீனர்களை எடுத்துக்கொண்டால் 'எமது தசையையும். குருதியையும் கொண்டு புதிய பெரும் சுவர் ஒன்றைச் சமைப்போம்' என்று அவர்களின் தேசிய கீதம் கூறுகிறது. கௌத்தமாலியர்களின் பாடல் 'கொடுங்கோலர்கள் உனது முகத்தில் துப்ப விடாதே' என்று சொல்லுகிறது. பல்கேரியநாட்டு வீரப்பாட்டோ 'கணக்கிலாப் போராளிகள் மக்களின் மகத்தான வாழ்வுக்காக மடிகிறார்கள்' எனப்பாடுகிறது. இந்த வரிசையில் மேரிலன்ட் தேசிய பாடலையும்நாம் கவனிக்காது விடமுடியாது அது அமெரிக்க உள்நாட்டுச் சண்டைக் காலத்திலிருந்து வழக்கிலிருந்து 'பல்றிமோர்த் தெருக்களில பதிந்த தேசாபிமான குத்தல்களுக்கு பழிவாங்கு' என்று அமைந்திருக்கிறது

எவ்விதமானாலும், திருத்தம் வேண்டுவோர் மார்சேயிலிஸ் கீதத்தில் எதிரிகள் பின் வாங்கும் போது சிந்தும் குருதி பற்றிய அழுத்தத்தை தாம் மிகவும் கடுமையாக எதிர்ப்பதாகக் கூறுகிறார்கள். இப்பகுதி தீவிர வலதுசாரி தேசிய முன்னணியினருக்கு பிடித்தமானதாயிருக்கும். ஆனால் அவர்களை விடகுறைந்த தத்துவார்த்த பழமைவாதிகள் கீதத்தைத்திருத்த முனைபவருக்கு எதிராக ஒன்று திரளுகிறார்கள். புரட்சிப் பிரான்சின் தெருக்களில் விளக்குகளுடன் பாடப்பட்டுத் திரிந்த கீதத்தைமாற்றுவது தேசத் துரோகம்எனக்கூறுகிறார்கள். மிக்கல் ரூணியர் என்ற நாவலாசிரியர் மார்சேயிலிஸ் 'பொருத்தமற்றது தான்" ஆனால் அதைத் தன்பாட்டுக்கு விட்டுவிடவேண்டும். பழைய தளபாடங்கள் போல் காலஞ்செல்லச் செல்ல அதன் பெறுமதிகூடும்" என்று கூறுகிறார்.

## மார்சேயிலிசு

துரோகத்தின் குருதிக்கறைப்
பதாகை எங்கள் தலைக்கு

மேல் பறக்கிறது.
நாட்டுப்புறத்தில் இராணுவத்
தின்
ஓசாரம் கேட்கிறதா
மக்களே 'ஆயுதங்களை எடுங்
கள்
உங்கள் பாசறையிலிருந்து
முன்னேறுங்கள்
அப்போது தான் அவர்களது
கலப்புக்
குருதி எங்கள் வயல்களை
நனைக்கும்

## உத்தேசிக்கப்பட்டிருக்கும் திருத்தம்

விடுதலையே எனது அருமை
விடுதலையே
உனது குருதிக் கோட்டைகள்
வீழ்ந்துவிட்டன.

பிரெஞ்சுக்காரனாய் இருப்பது
எவ்வளவு நல்லது
எமது கொடிபற்றிப்
பெருமைப்படுவோம்
எல்லோரும் ஒன்றாக
கைகோர்த்துப் பாடுவோம்
அப்பாட்டுகள் பீரங்கிகளின்
சத்தத்தை இல்லாமல் செய்
யட்டும்

குறிப்பு:- Gothic - கோதிக - முற்கால கிழக்கு ஜேர்மானிய இன மொழி

ரைம்ஸ்: 16-3-92

# போர்த்திட்டங்களில் மாற்றம் இராணுவத்துள் சீர்குலைவைத் தடுக்குமா?

சில வாரங்களிற்கு முன்பு கூட்டுப்படைத் தலைமையகம் மிகவும் பலம் பொருந்திய தொரு மையமாக இருந்தது. அங்கு போருக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. அங்கிருந்து கட்டளைகள் அனுப்பப்பட்டன. முப்படைகளின் தளபதிகளும் அதன் உத்தரவுகளின்படி தொழிற்பட்டார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது சமீபத்தில் இராணுவ உயர் பீடத்திற் செய்யப்பட்ட மாற்றங்களின் படி கூட்டுப்படைத் தலைமையகம் ஒரு பார்வையாளர் தரத்திறகுக் கிழிறங்கி விட்டது. முப்படைகளின் தளபதிகளும் பலமடைந்து விட்டார்கள் இனிமேல் திட்டமிடும், கட்டளையிடும் மையங்களாக முப்படைகளின் தலைமையகங்கள் இயங்கப் போகின்றன. கூடுதல் அதிகாரங்களைப் பெற்றிருக்கும் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல சிசில் வைத்தியரட்னா போர்முனைத் தலைமைகளிலும் மாற்றங்களைச் செய்துள்ளார். இதன்படி இரண்டு முதுநிலைத் தளபதிகளின் அதிகாரங்கள் குறைககப்பட்டுள்ளன.

இராணுவ உயர் பீடத்திலும, போர்முனைத் தலைமைகளிலும் செய்யப்பட்ட மாற்றங்களின் முடிவில் இராணுவத தளபதிகளில் குறிப்பிடட ஒரு சாராரின் நலன்கள் ஸ்திரப்படுத்தப்பட்டிருப்பது போற் தெரிகிறது அரச உயர் பீடத்திற்கு உறுதஙாக இருக்கக் கூடியவர்கள் என்று கருதும் தளபதிகள் ஒதுககப்பட்டுள்ளார்களோ என்ற சந்தேகமும் எழுகிறது. குறிப்பாக மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானபோது இராணுவததை முக்கியத்துவப்படுத்தும் அரசின் பிரசார நடவடிக்கைகளால் அரசியல்வாதிகளிறகு அச்சுறுததலான விதத்தில் தெற்கில ஒரு கதாநாயகனைப் போல வளர்ந்த இவர், இன்று அவமானமுண்டாகும் விதத்தில் ஒதுக்கப்பட்டுள்ளார். ஒரு தண்டனைப் பதவிக் குறைப்பை ஒத்ததாக இவரது அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சேவை மூப்பின்படி இவ்வருடத்தில் ஓய்வு பெற வேண்டிய இவரது பதவிக் காலத்தை ஜனாதிபதி நினைத்தால் நீடிக்கலாம். ஆனால் இப்போது பாதிக்கப்பட்டுள்ள டென்சில் கொப்பேகடுவ பதவி நீடிப்பிற்கான வேண்டுகோளைச் சாதகமாகப் பரிசீலிப்பார் என்று நம்புவது கடினம்.

கூட்டுப் படைத் தலைமையகத்தின் போர்த்திட்டங்களில் அரசாங்கம் சலிப்படைந்திருக்கலாம். அதனால் கூட்டுப்படைத் தலைமையகத்திடமிருந்த அதிகாரங்கள் முப்படைத் தளபதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருககலாம். இனிமேல் ஒரு தாக்குதலைத் திட்டமிடுகையில் முப்படைத் தளபதிகளும் கூடி ஆலோசிக்கப் போகிறார்கள். இது கிட்டத்தட்ட கூட்டுப் படைத் தலைமையகத்தின் செயற்பாடுகளை ஒததது தான்.

ஆனால் இங்கு அதிகாரம் பொருந்திய ஒருதளபதி இருக்கப்போவதில்லை. அதேசமயம் முப்படைத் தளபதிகளுக் இடையில் பலம் பொருந்திய வராக இராணுவத் தளபதி இருப்பார். அவர் மற்றைய படைத்தளபதிகளின் ஒததுழைப்பைக் கோருவார். ஒப்பீட்டளவில் கூட்டுப்படைத் தலைமையகம் சாதித்ததை விட, புதிய அமைப்பு கூடுதலாகச் சாதிக்குமா என்ற சந்தேகங்களும் எழுகின்றன. ஏனெனில் இங்கு தீர்மானிக்கும், உத்தரவிடும் ஓர் தளபதி கிடையாது இது இராணுவ நோக்கில் பலவீனமானது எல்லரும் திட்டமிடும், கட்டளையிடும் தகுதியுடையவர்களாய் இருப்பதோ அல்லது திட்டமிடும்கட்டளையிடும் தகுதியை உடைய தளபதி ஏனைய தளபதிகளைவிட குறைந்த வித்தியாசத்தில் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டிருப்பதோ போர் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் சிரமங்களை ஏற்படுத்தும் எப்பொழுதும் ஒரு வெற்றிகரமான இராணுவ நடவடிக்கைக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட பூரண அதிகாரமுடைய தலைமை மிக அவசியம் புதிய மாற்றங்களில் அத்தகைய தலைமையின் தேவை ஒரு முக்கிய பிரச்சினையாகக் கவனத்திற் கொள்ளப்படவில்லை போல் தெரிகிறது.

அதிகாரங்கள் அதிகரிககப்பட்டதும் இராணுவத்தளபதி இதற்கு முன் பினபற்றப்பட்டு வந்த போர்த்திட்டங்களின் மீதான தனது அதிருப்தியை பகிரங்கப்படுததியுள்ளார். அவர் புதிய போர்த்திட்டங்களை அமுல்படுத்தப்போகிறார் என ஊகிக்கலாம். கிழக்கில் மூன்று மாதகாலத்திற்குள் சிவில நிர்வாகத்தைக் கொண்டுவரப்போவதாக அவர் அறிவித்தபோது அதிகாரங்களை இழந்த கூட்டுப்படைத் தளபதியான ஹமில்டன் வனசிங்க அவ்வாறு செய்து காட்டினால் தான் பதவி விலகப் போவதாகக் கூறினார். தளபதிகளிற்கிடையிலான முரண்பாடு பகிரங்கமாகியிருக்கிறது.

இராணுவ உயர் மட்டததில் செய்யபபட்ட மாற்றங்கள் தளபதிகளிற்கிடையிலான முரண்பாடுகளை வெளிக்கொணர்ந்திருக்கின்றன. தளபதிகள் வெளிப்படையாக போர்ததிட்டங்கள் குறித்தே முரண்படுகிறார்கள் எனினும் முரண்பாடுகளின் அடிப்படை இராணுவத்தின் கட்டுமானததிலேயே காணப்படுகிறது.

சிறிலங்கா இராணுவம் ஒரு வகையில் இனப்பிரச்சினையின் இராணுவம் தான். இலங்கை 'சுதந்திர'மடைந்ததின் பின்பு ராணுவம் சுதந்திர தின விழாக்களில அணிவகுத்துச் செல்லும் ஒரு சம்பிரதாய பூர்வ படையாகவே இருந்துவந்தது இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக வளரத் தொடங்கவும் இராணுவமும் அதற்கெதிராக தன்னைப் பலப்படுத்திக் கொள்ளலாயிற்று. 70களின் முற்கூறில் ஜே. வி. பியின் கிளர்ச்சியும் அதன் பின் தமிழர்களின் போராட்டமும் இராணுவத்தை ஒரு போர் புரியும் படையாக மாற்றின இன்று தமிழர்களின சுதந்திரப் போராட்டத்தின் முதிர் நிலையில் இராணுவம் இலங்கை அரசியலில் இன்றியமையாத தீர்மானிக்கும் சக்தியாக வளர்ந்துவிட்டது.

83 யூலைக் கலவரத்தோடு இந்தியா தமிழர்களின் போராட்டத்தில நேரடியாகத் தலையிட்டது இதனால் தமிழர்களின் போராட்ட இயக்கங்கள் அவற்றின் இயல்பில் வளரவிடப்படாது வீங்கவைக்கப்பட்டன என்றே பொதுவாகக் கூறப்படுகிறது இதே போல் சிறிலங்கா அரசும் தனது இராணுவத்தை வீங்கச் செய்தது 87இல் இந்தியப் படை வரும்வரை இந்த வீக்கம் தொடர்ந்தது. இந்தியப் படை இங்கிருந்த காலம் முன்னைய ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் ராணுவத்தின் வளர்ச்சி வேகம் (வீக்கம்) ஓரளவுக்குமந்தமாயிருந்தது. ஆனால் இரண்டாவது ஈழப்போரோடு புலிகளின் படையணிகளைச் சமாளிக்க இராணுவம் விபரீதமாக வீங்கலாயிற்று இன்று நாங்கள் பார்ப்பது தன் இயல்பில் படிப்படியாக வளராது, தனது வல்லமைக்கு மீறி வீங்கிப் போயுள்ள இராணுவத்தைத்தான்.

படையணிகளை அதிகரிப்பதே புலிகளை வெல்வதற்கான ஒரே வழி என்ற தளபதிகளினதும் அரசினதும் மாறாத நம்பிக்கைகளின்படி இப்போது படையணிகள் அதிகரிக்கபபட்டுள்ளன. (இந்த அதிகரிப்பும் போதாது என்று கொழும்பிலுள்ள விமர்சகர்கள் கூறுகிறார்கள்) இன்று மிக நவீன சுடுபடைக் கலன்கள், விமானங்கள், டாங்கிகள் இராணுவத்திடம் உண்டு. ஆனாலும் இராணுவத்தால் எதிர்பார்த்த விரைந்த வெற்றிகளை ஈட்டித்தர முடியவில்லை. பதிலுக்கு சில சமயங்களில் சகிக்க முடியாத தோல்விகளே ஏற்பட்டு விடுகின்றன. படைத் தளபதிகள் போர்த்திட்டங்களைக் குறைகூறுவதில், ஒருவர் மற்றவரின் போர்த்திட்டங்களை விமர்சிப்பதில் முரண்பட்டுக் கொள்கிறார்கள் குழுக்களாகப் பிரிந்து நிற்கிறார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால், இராணுவம் வீங்கிப்போயுள்ளது என்பதே. துருப்புக்கள் அவசரமாகவும் இனரீதியாகவும் திரட்டப்படுகிறார்கள். அவசரப் பயிற்சி முகாம்களில் இருந்து அவர்கள் நேரடியாகவே மிக ஆபத்தான யுத்த முனைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்குப் போதிய ஓய்வு கொடுக்கப்படுவதில்லை. இதனால் துருப்புக்களிடம் கட்டுப்பாடு குலைகிறது விடுமுறையில் செல்லும் துருப்புக்கள் சமூகத்திற் குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் ஒரு தொகையினர் போர்முனைக்கு திரும்பாமலேயே தலைமறைவாகி விடுகிறார்கள்..

இராணுவ உயர்பீடத்தில் செய்யப்பட்ட மாற்றங்களாலும் போர்த்திட்டங்களை மாற்றுவதனாலும் மேற்படி சீர்குலைவுகளை நீக்கிவிடலாம் என அரசும் தளபதிகளும் நம்பக்கூடும். ஆனால் விபரீதமாக வீங்கிப்போயுள்ள இராணுவம் எத்தகைய அதிகார மாற்றங்களினாலும் புதிய போர்த்திட்டங்களினாலும் தீர்க்க முடியாத நோய்களைக் கொண்டுள்ளது. ஒரே மருந்து தீர்க்கதரிசனமற்ற இந்த யுத்தத்தை இலங்கை அரசு முடிவுக்குக்கொண்டுவருவதுதான். இல்லையேல், கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக வெல்ல முடியாத ஒரு யுத்தத்திற்காக வீங்கிக் கொண்டு வரும் இலங்கை இராணுவத்திலிருந்து சமூகத்திற்குள் செல்லும் துருப்புக்கள் தொடர்ந்தும் நோய்க்கிருமிகளாகவே தொழிற்படப் போகிறார்கள்.

நிலாந்தன்

## பிரேமா அரசின்

செல்வா ஒப்பந்தம் நிகழ்ந்தது பண்டா தமிழரசுக் கட்சியை சமாதானப படுத்தக் கூடிய வகையில் குறைந்தபட்ச ஒப்பந்தத்துக்குத் தயாரானார். இவ் ஒப்பந்தம் தமிழரசுக்கட்சி எதிர்பார்த்ததையும் கோரியதையும் விடக் குறைவானது. இங்கு பண்டா ஒப்பந்தத்துக்கு வந்தது தமிழரின் உரிமைபற்றிய நோக்கு நிலையில் இருந்து அல்ல தனது சொந்த அரசியல் நெருக்கடியில் ஓர் நெகிழ்ச்சியை ஏற்படுத்துவதற்காகவே

1965ம் ஆண்டு ஐ தே.க. செல்வாவுடன ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டமையும் ஐதேகவின் சொந்த அரசியலலாபத்தை நோக்கமாகக் கொண்டதே-தவிர தமிழ் மக்களின் பிரச்சினையை மையமாகக் கொண்டதல்ல. 65 பொதுத் தேர்தலின் மூலம் தனித்து நின்று அரசாங்கத்தை அமைக்க முடியாத ஐதேகவும் தமிழரசுக் கட்சியின அனுசரணையைப் பெற்று அரசாங்கத்தை அமைப்பதற்காக அது தமிழர் பிரச்சினை சம்பந்தமாக ஓர் ஒப்பந்தத்துக்கு வரலாயிற்று அதுவும் தமிழரசுக் கட்சி கோரியதையும் எதிர்பார்த்ததையும் விடக் குறைவான ஓர் ஒப்பந்தத்தையே செய்து கொண்டது. ஆயினும் தனது பதவி நிலையை ஸ்திரப்படுத்தியதும் ஒப்பந்தத்தை அது கைவிடலாயிற்று.

1987-ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பநதத்திற்கும் இதே போன்றதொரு பின்னணியுண்டு. ஜே ஆர் அரசு பெரும் நெருக்கடிக்கு உள்ளாகிய நிலையில், இந்தியாவின் நேரடித் தலையீட்டினைத் தவிர்ப்பதற்காகவும் இந்தியாவையும் தமிழரையும ஏமாற்றுவதற்கு ஏற்றவகையிலும் ஒரு தீர்வுக்கு வரவேண்டிய அவசியம் ஜே.ஆருக்கு இருந்தது. இந்நிலையில ஓர் போலியான திட்டத்தை தமிழரும் இந்தியாவும் ஏற்பதைவிடக் குறைந்த திட்டத்துக்கு ஜே. ஆர். வரலனார் ஜே ஆரின் திட்டத்திற்கு விடுதலைப்புலிகளோ அல்லது தமிழ் மக்களோ ஏமாற முடியாத அரசியல் விழிப்பு தமிழ் மக்கள் மத்தியில் நிலவியது.

பொதுவில் மேற்கூறிய மூன்று ஒப்பந்தங்களிலும் சிங்கள அரசு தனது சுய அரசியல் நெருக்கடிகளின் நிமித்தம் தான் ஒப்பந்தங்களுக்கு வந்தது என்பதையும் இறுதியில் அது தன்னை சுதாகரிக்கும் சூழலில் ஒப்பந்தங்களை மீறியதையும் ஒரு பொது உண்மையாகக் காண முடிகிறது

இதேபோலவே விடுதலைப் புலிகளுடன் பிரேமதாசா பேச்சுவார்த்தை நடாத்திய காலமும் பிரேமா தமிழ் மக்களின் நோக்கு நிலையிலிருந்ததல்லாமல் இலங்கையில் இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தால் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளைத் தணிப்பதற்காகப் புலிகளுடன் பேசி பிரச்சினையைத் தணிப்பதற்கான நிலைமைக்குத் தயாரானார். தமிழ்த் தலைமைகளுடன் சிங்களத் தலைமைகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட ஒவ்வொரு காலகட்டமும் சிங்களத் தலைமைகள் தாம் எதிர்நோக்கிய அரசியல் நெருக்கடிகளைத் தணிப்பதற்காகவே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அல்ல

மேற் குறிப்பிட்ட ஆசிரிய தலையங்கததில் எழுதப்பட்டுள்ளது போல சிங்கள அரசுக்கு பல அரசியல் அழுக்கங்கள் உண்டு. அதின் நிமித்தம் அது பேச்சுவார்த்தை பற்றி கதைக்கின்றதாயினும் அது தீர்வுக்குத் தயாரில்லை எனத் தெரிகிறது. சிங்கள அரசியலின் உள் முரண்பாடுகள் இதன் பொருட்டுக் கவனிக்கபபடவேண்டியவையாகும்.

கெடுபிடியுத்தம் ஓய்ந்ததும் கிழக்குஐரோப்பா சிதறியது. அது இலங்கைக்கு கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அதிகளவு ஆயுத தளபாடங்களை மலிவு விலையில் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பைக் கொடுத்தது. மேலும் ஆயுத விற்பனையை ஒரு வர்த்தகமாக மேற்கொள்ளும் சீனா அரசியல் உள்நோக்கத்துடனும் இலங்கைக்கு ஆயுத விற்பனையை மேற்கொள்ளலாயிற்று கெடுபிடி யுத்தம் முடிவடைந்தமை இவ்விடயத்தில சீனாவுக்கும் வாய்ப்பாய் அமைந்தது இந்நிலையில் இலங்கை இராணுவரீதியில கொடுப்பதற்கான வாய்ப்பைப்பெற்றது. மேலும் ராஜீவின்மரணத்தைத் தொடர்ந்து புலிகள் மீது இந்தியா சுமத்தும் குற்றச்சாட்டு அரசியல் இராணுவ ரீதியில் இலங்கைக்கு வாய்ப்பானதாய் அமைந்தது. இப்பின்னணிகளில் நின்று கொண்டு இராணுவரீதியான கண்ணோட்டத்தில் தமிழரின் பிரச்சினையை அணுகும்போக்கே தென்னிலங்கையில முனைப்புப் பெறலாயிற்று இது ஓர் இயல்

(4 ஆம் பக்கம் பார்க்க)


புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.
New College of High Studies
O/L Day Classes
ஆரம்பம் - 28-04-92
[8 மணி]
O/L (சனி - ஞாயிறு)
புதிய பிரிவு ஆரம்பம்
25- 4- 92
காலை 6 மணி
(சி/4278)

# திருப்பு முனையில் 14 வருட ஆப்கான் போர்; ஓய்விற்கான அறிகுறிகள் தெரியவில்லை

உலகில் பனிப்போர் ஓர் முடிவிற்கு வந்துள்ளது ஆனால். இதனால் உருவான ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப்போர் முடிவுறுவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. கடந்த 14 வருடங்களில் 10 லட்சம் ஆப்கானியர்களைப் பலி கொண்டதோடு, பல லச்சம் ஆப்கானியர்களை நாட்டைவிட்டு விரட்டிய இவ் உள்நாட்டுப்போர் தற்பொழுது மீண்டும் ஒரு நெருக்கடியான திருப்பு முனையில் உள்ளது. இதிலும் ஆட்சி அதிகாரங்கள் மாறலாம், ஆனால், உள்நாட்டுப்போர் ஓய்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக இல்லை.

ஆறு வருடங்களாக ஆப்கனிஸ்தானின் அதிபராக இருந்த டாக்டர் நஜிபுல்லாவின் ஆட்சி அவரது சகாக்களினாலேயே கவிழ்க்கப் பட்டதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் பெரும் அரசியல் நெருக்கடியும் பதற்ற நிலை உருவாகியுள்ளதோடு, ஆப்கானிஸ்தானின் அரசாங்கம் செயலிழந்தும் போயுள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்த முன்னாள் சோவியத் யூனியனின் படைகள் 1987 ஆம் ஆண்டிலிருந்து வெளியேறத் தொடங்கிய போதே நஜிபுல்லாவின் அரசாங்கம் எவ்வளவு காலத்திற்கு தாக்குப் பிடிக்கும் என்ற கேள்வி எழுப்பப்பட்டது. மேற்கத்தைய இராஜதந்திரிகள் இரண்டு மாதங்களுக்குமேல் நஜிபுல்லா அரசாங்கம் தாக்குப் பிடிக்காது எனத் தெரிவித்தனர். ஆனால், எதிர்பார்த்தமாதிரி நடக்கவில்லை. ஜலதாபாத் நகரை கைப்பற்ற முஜாகிதீன் கெரில்லாக்கள் மேற்கொண்ட தாக்குதல் தோல்வியில் முடிவடைந்ததுடன் கெரிலாக்களின் முயற்சிகள் ஓரளவு பின் தள்ளப்பட்டன. ஆனால், சிலமாதங்களின் பின் கேஸ்ட் நகரைக் கெரிலக்கள் கைப்பற்றினர் ஆயினும், இடைக்கிடை காபூல் நகர் மீது ரொக்கட் தாக்குதல் நடத்துவதோடு முஜாகிதீன் கெரிலாக்கள் நின்று கொண்டார்கள்.

## சோவியத் சிதைவும் ஆப்கானும்

இதேவேளை சர்வதேச அரங்கில் பெரும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன சோவியத் யூனியன் சிதைவுடன் பனிப்போருக்கும் முற்றுப்புள்ளி ஏற்பட்டது ஆப்கானில் இருந்து சோவியத் படைகள் வெளியேறியபோது அமெரிக்காவுக்கும், முன்னாள் சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாடும், அமெரிக்கா - பாகிஸ்தான் உறவில் ஏற்பட்ட விரிசலும், முஜாஜிதீன் கெரிலாக்களின் ஆயுத விநியோகத்தையும் அவர்களுக்கான உதவியையும் வெகுவாகப்பாதித்தன.

இதேவேளைஆப்கானிஸ்தான் அரசும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதுவரை சோவியத் யூனியனில் இருந்து சகல உதவிகளையும் - உணவு, எரிபொருள், ஆயுதங்கள், தளபாடங்கள் - பெற்று வந்த ஆப்கான் அரசு பெரும் நெருக்கடிக்கு உள்ளானது. அதிலும் சோவியத் யூனியனின் சிதைவு ஆப்கானை பெரியளவில் பாதித்தது. சோவியத் யூனியனின் சிதைவால் ஆப்கானுக்கான சகல விநியோகங்களும் துண்டிக்கப்பட்டன. ஆப்கானிஸ்தானில் பெரும் உணவு நெருக்கடிகளும், பற்றாககுறையும் ஏற்பட்டன.

## நஜிபுல்லாவின். கொள்கை மாற்றம்

இந்நிலையில், ஆப்கான் அதிபர் நஜிபுல்லா முகஜிதீன் செரிலாக்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் தீவிர அக்கறை காட்டினார். சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறியதில் இருந்தே முகஜிதீன்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக நஜிபுல்லா அறிவித்து வந்தார் ஆனால், முகஜிதீன்கள் நஜிபுல்லா பதவி விலக வேண்டும். முகஜிதீன்கள் கையில் ஆட்சி ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து வந்தார். சில குழுக்கள் பேச்சுவார்த்தைக்கு முற்பட்ட போதும் பிரதான குழுக்கள் அதைஏற்கவில்லை.

ஆப்கான் கெரில்லாக்கள் பெரும் ஆயுத பலமும், ஆட்பலமும் கொண்டவையாக இருந்த போதிலும் அவர்களுக்குள் பாரிய முரண்பாடுகளும் இருந்தன இதனால் இன, மதப் பிரிவுகள் அடிப்படையில், கெரிலாக் குழுக்கள் பிரிந்தும், தங்களுக்குள் சண்டையிட்டும் கொண்டிருந்தன. அத்தோடு, அண்டை நாடுகளான பாகிஸ்தான், ஈரான் சார்புடனாகவும் அதற்கான முரண்பாடும் கொண்டும் இருந்தன.

## இடைக்கால அரசாங்கம்

இந் நிலையில், தற்போதைய நெருக்கடி ஆப்கானிஸ்தான் அதிபர், நஜிபுல்லா நந்நிலைமை இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கு அழைப்பு விடுத்ததைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும்- டாக்டர். நஜிபுல்லா கடந்த மாத மத்தியல் ஐ.நா.வின் உதவியுடன் அமைக்கப்பட்ட இடைக்கால அரசொன்றிடம் தான் ஆட்சியை அமைக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார் இதைத் தொடர்ந்து ஆப்கான் அரசியலில் மீண்டும் குழப்பங்கள் ஏற்படத் தொடங்கின. இக்குழப்பம், இம்மாதம் பத்தாம் திகதிநஜிபுல்லா இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் சரி, அமைக்கப்படாவிட்டாலும் சரி, தான் ஏப்ரல் மாதஇறுதியில்அல்லது மேமாதம் முதல் வாரத்தில பதவிவிலகப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து தீவிரமாகியது.

நந்நிலையைய ளர் 15 பேர் கொண்ட ஓர் இடைக்கால அரசாங்கம் ஒன்றைநிறுவுவது என்றும்பின்னர் ஒருவருடத்திற்குள் தேர்தல் நடத்துவது என்ற நஜிபுல்லாவின் திட்டம் பொதுவாக உலகநாடுகளினால் குறிப்பாக மேற்கு நாடுகளின் அங்கீகாரத்தையும், பாகிஸ்தானின வரவேற்பையும பெற்றது பாகிஸ்தான் தமது நாட்டில் இருந்த முஜாகிதீன் செரில்ல த்தலைவர்களைச் சந்தித்து இடைக்கால அரசாங்கத்தில பங்குபற்றுமாறு வற்புறுத்தியது. ஆனால் தீவிர போக்குடைய கோரிக்கைகள் ஆனால் இக் கோரிக்கைகளை தீவிர இஸ்லாமிய அடிப்படை கோட்பாட்டாளர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. தீவிர இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாட்டாளிகள் - இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

## நஜிபுல்லா கவிழ்ப்பு

இதேவேளை, நஜிபுல்லா ஆட்சியை விட்டு விலகப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இதுவரை ஆட்சியில் இருந்த வாட்டன் கட்சியினர் - நஜிபுல்லாவும் இதே கட்சியைசசார்ந்தவர் - நஜிபுல்லாவை ஆட்சியில் இருந்து கவிழ்த்தார். இதற்கு இராணுவத்தினரின் ஆதரவும் அவர்களுக்குஓரளவு இருந்தது. நாட்டின் ஆட்சிஅதிகாரம்முன்னைய உப-ஜனாதிபதிகளாக நால்வரின் கையில் சென்றடைந்த நஜிபுல்லா தலைமை தாங்கிய அரசாங்கத்தினரே நஜிபுல்லாவை ஓர் துரோகி எனததெரிவித்தனர்.

இவ்வாறான குழப்ப நிலை உருவாகிய வேளையில், முஜாகிதீன்கெரிலாக்குழுக்கள் ஆப்கானிஸ்தான் நகர்களைக் கைப்பற்றினர். ஆப்கான் கிளர்ச்சிக் குழுவில் பலம் மிக்கதும் செல்வாக்கு மிக்கதுமான அஹமத்ஷா மசூததலைமையினை கிளர்ச்சிக் குழுவும், இராணுவத்திலிருந்த அதிருப்தியாளர்களும் இணைந்து காபூலுக்கு 30 மைல தொலைவில் உள்ள பிரதான விமானப்படைத்தளங்களில் ஒன்றாகிய பக்ராம் விமானப் படைத்தளத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இதே வேளை. இராணுவத்தினருக்கும், இக்கிளர்ச்சிக் குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படுகைகாரணமாகஜலலாபார்த் போன்ற நகரங்கள் கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளன. இதேவேளை காபூலுக்கு வடக்கே தமது படைகளையும் குவித்துள்ளனர்.

இந்நிலையில் அரசங்கத்தைக் கைப்பற்றியுள்ள வாட்டன் கட்சியினர் சமாதான முறையில், ஆட்சி அதிகாரத்தைக் கையளிப்பதாகத் தெரிவித்துள்ளனர். ஐ.நாவின் இடைக்காலத் தீர்வுத்திட்டத்தை ஏற்கவும், அவை விருப்பம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கிளர்ச்சிக்குழுவின் தலைவரான அஹமத்ஷா மசூது உடன் ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் வாக்கீல் பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளார் பேச்சுவார்த்தைகள் எந்த நிலையில் இருப்பினும் காபூலைத் தாக்குவதில்லை எனவும், சமாதானத் திட்டம் ஒன்றை தாம் விரும்புவதாகவும் மசூது தெரிவித்துள்ளார்.

## தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகள்

ஆனால்,ஆப்கான் தீவிரவாதக்குழுக்களில தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகளை ஹெக்மட்யார் தலைமையினை கிளர்ச்சிக்குழு ஐ நா தீர்வுத்திட்டத்தை ஏற்பதாக இல்லை கடைசியாக கிடைத்த செய்திகளின் படி இன்று(வெள்ளிக்கிழமை) மசூதுயாளருடனும், அரச இராணுவமும் காபூலை விட்டுவிலகாவிட்டால் காபூல் மீது தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரித்துள்ளார். ஹெக்மட்யார் அதிகாரம் உடனடியாக தான் நியமித்தகுழுவிடம் கைமாற்றப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதனை உறுதிப்படுத்துமாப்போல் ஹெக்மாட்யார் தலைமையிலான கெரில்லாக்கள்காபூல்நோக்கி முன்னேறிச் செல்வதாகவும் தெரிகின்றது. இவரது படைகள் காபூலுக்கு தெற்கில்குவிக்கப்பட்டுள்ளது. முதலில் ஐ நா.வின் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவளித்து வந்த பாகிஸ்தானும் ஹெக்மாட்டியாரின் கோரிக்கைக்கு ஆதரவு அளித்துள்ளது நீண்ட காலமாக ஆப்கானிஸ்தானை ஆண்டுவந்த இனத்தைச் சேர்ந்த ஹெக்மட்யார் ஆப்கானிஸ்தானில் சிறுபான்மை இன மொழியினர் ஆட்சியைப் பிடிக்க சதி செய்வதாகத்தெரிவித்துள்ளனர். இதிலிருந்து இதமோதல் தொடர்வதற்கான வாய்ப்பு பெருமளவில் உள்ளது தெரியவருகிறது.

ஆப்கானிஸ்தானில் இன்று உருவாகியுள்ள இந்நெருக்கடி கடந்த14 வருடத்திற்கு மேலாக நடைபெற்றுவரும் ஓர் உள்நாட்டுப் போரின் உச்சகட்டமானதும் இந்த உள்நாட்டுப் போர் உடனடியாகத் தீர்ந்து விடும் என்று சொல்லிவிட முடியாது இன்று உருவாகிவரும் சர்வதேச அரசியல் ஒழுங்கும் உலகில் வளர்ந்து வருவதாகக் கூறப்படும் இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் அரசியல் சூழ்நிலைக்கும் ஏற்பவே ஆப்கான் உள்நாட்டுப்போர் இட்டுச் செல்லப்படலாம்.

## மேற்கின் விருப்பம்

ஆப்கானிஸ்தானில் இன்று ஓர் இடைக்கால அரசு உருவாவதையே அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் விரும்புகின்றன. ஐ.நா. தூதுவர் இடைக்கால அரசு ஒன்று உருவாக்குவதற்குத் தீவிர கவனம் செலுத்துவதில் இருந்தே இதனைக் கண்டு கொள்ளலாம். ஆனால், அவரது முயற்சியில் பெருமளவு முன்னேற்றம் கிட்டவில்லை ஆயினும் அவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இவ் இடைக்காலஅரசாங்கம் ஒன்று அமைப்பதன் மூலம், ஆப்கானிஸ்தானில் தீவிர இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கை ஓங்காமல் தடுப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். அதாவது தற்போதைய ஆப்கானில் ஆட்சிபுரியும் வாட்டன் கட்சியினரையும். அஹமத்ஷா மசூதுயினர் சேர்ந்து ஆட்சி அமைப்பது அமெரிக்காவைப்பொறுத்து விரும்பத்தக்கதாகும் அவ்வாறான ஒரு நிலை உருவாகாவிடினும் அஹமத்ஷா மசூது தலைமையில ஓர் அரசு அமைவதையே அமெரிக்கா விரும்புகின்றது. ஹெக்மாட்யார் ஆட்சி அமைக்கும் பட்சத்தில் தென்மேற்கு ஆசியாவில் பலம் பெற்றுவரும் இஸ்லாமிய அடிப்படைவாதம் மேலும் வளர்ச்சியுற்று விடும் எனவும்அதுதனது ஆதிக்கத்திற்குதடைக்கல்லாகி விடலாம் எனவும் அமெரிக்கா கருதுவதே காரணமாகும். அத்தோடு ஹெக்மாட்யாருக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிப்பதும் இதன் மூலம் பிராந்தியத்தில் பாகிஸ்தான் செல்வாக்குப் பெறுவதையும் அமெரிக்கா விரும்பவில்லை என்பதை உணரக்கூடியதாக உள்ளது. இது தென்மேற்கு, ஆசியாவில் இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு பலம் சேர்ப்பதாக அமைந்து விடக்கூடியதெனக் கருதப்படுகின்றது.

ஆனால், ஆப்கானிஸ்தானில் இன்றுள்ள குழப்ப நிலையில், அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சிகள் எந்தளவிற்கு வெற்றிபெறும் என்று கூறிவிட முடியாது அதோடு, பாகிஸ்தானுடனான உறவு நிலையும் பாதிக்கப்பட்டிருப்பது அமெரிக்காவின் ஆதரவது ஐ.நா.வின் முயற்சிக்கு எந்தளவிற்கு உதவும் என்பது கேள்விக்குரியதே.

ஆனால், ஹெக்மாட்யாரி தலைமையிலான தீவிரஇஸ்லாமிய அடிப்படை வாதக்குழுவும் ஆப்கானிஸ்தானில் எஞ்சியுள்ள இராணுவத்துடன்- ஒரு பகுதி ஓடிவிட்டது. ஒருபகுதி மசூது கிளர்ச்சிக்குழுவுடன் சேர்ந்துவிட்டது - நேரடியாக மோதி வெற்றி கொண்டுவிடும் எனவும் திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது. ஹெக்மாட்யாரின் கெரில்லாக்களை தம்மால் தடுத்து நிறுத்த முடியும் என காபூல அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் காபூலைக் கைப்பற்ற பிரதான இரு கிளர்ச்சிகுழுக்களும் முனையும் மட்டத்தில தீவிரவாத இஸ்லாமிய கிளர்ச்சிக்குழுவினரின் வெற்றிவாய்ப்பு குறைவெனவே உள்ளது என ஊகிக்க முடிகிறது. ஆனால் தற்பொழுது உள்ள நிலையில் காபூலைக் கைப்பற்றுவதற்கு யார் முனைனிலும் இப்போர் இதுவரை நடந்துவந்த உள்நாட்டுயுத்தத்திற்கு முடிவாக இருக்காது. உள்நாட்டுப் போரின் புதிய ஒரு அத்தியாயத்தின் தொடக்கமாகவே இருக்கும் என்பதில் ஐயம் எதுவுமில்லை. இதேவேளை, ஆப்கானிஸ்தான பல துண்டுகளாகச் சிதறிப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

-ஜெயராஜ்

# தொண். ஆசிரியர் நியமனம் பயணம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குவது தொடர்பான கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் கொழும்புப் பயணம் பிறபோடப்பட்டிருக்கிறது.

கல்விப் பணிப்பாளருடன் செல்ல இருக்கும் ஏனையோரது பெயர்ப் பட்டியல் தயாரிக்கபபடவில்லை, கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டிய விடயங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்படவில்லை, இவை போன்ற காரணங்களால் இக் குழுவினரின் கொழும்புப் பயணம் பிற்போடப்பட்டிருக்கிறது.

எனினும் அடுத்த மாதம் முற்பகுதியில் மேற்படி குழுவினரின் கொழும்புக்கான பயணம் மேற்கொள்ளப்பட இருப்பதாக கூறப்படுகிறது.

# நூல் வெளியீட்டு விழா

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு ந. பத்மநாதன் அவர்களின் 'வள்ளுவர் வழியில் வீரம், மானம்' என்னும் நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சி நடைபெறவுள்ளது

திரு க.சொக்கலிங்கம்அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் வெளியீட்டுரையை திரு. புதுவை இரத்தினதுரை அவர்களும் கருத்துரைகளை தமிழேந்தி, யோகரத்தினம் யோகி, செல்வி சுதாமதி, க. திருநாவுக்கரசு, பண்டிதர் பரந்தாமன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

# மெக்சிக்கோவில் வெடிவிபத்து 200பேர் பலி; 400பேர் காயம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நகரமொன்றில் நிலத்திற்கு கீழ் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக 200க்கு மேற்பட்டோர் பலியாகியதுடன் 600 பேர் காயமடைந்துள்ளனர்.

நகரத்தில் கழிவு நீரோடு, வாயுக்கள் அல்லது இரசாயனங்கலந்ததால் இவ் வெடிவிபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வெடிவிபத்தால் 15 மீற்றர் ஆழத்திற்கு பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன இந்த குழிகளுக்குள் சிலவீடுகள் முற்றாகவே புதையுண்டன.

இப் பகுதியில் 10 க்கு மேற்பட்ட வெடிவிபத்துகள் ஏற்பட்டன. இதனால் ஆயிரம் கட்டடங்கள் வரை சேதமடைந்தன கட்டட இடிபாடுகளை அகற்றி உயிருடன் இருப்பவர்களை மீட்கும் வேலை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில் இப் பகுதியில் கொள்ளை அடித்ததாக 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## சோலங்கி கடிதம் பற்றி ராவுக்கு தெரியாதாம்

(டில்லி)

போபர்ஸ் புலன் விசாரணையில் சுவிற்சலாந்தின் வெளியுறவு அமைச்சரிடம் முன்னாள் வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி ஒப்படைத்த குறிப்புக் குறித்து தமக்கு எதுவும் தெரியாதென்று இந்தியப் பிரதமர் பி, வி, நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

லோக்சபாவில் நேற்றுஉரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். சுவிற்சலாந்தின் வெளியுறவு அமைச்சரிடம் இந்தக் குறிப்பை ஒப்படைக்க மாதவ்சிங் சோலங்கிக்கு அதிகாரம் அளிப்பதான கேள்விக்கே இடமில்லை என்றும், இதுதான் இந்தவிடயத்தில் உண்மையாக நடந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அரசாங்கமோ மத்திய புலனாய்வுக் கழகமோ தகுந்த முறையில் நடந்து கொள்ளவில்லை என்று கூறுவதற்கும் இடமே இல்லை என்று அவர் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10.00 மணிக்கு முத்திரைச்சந்தி சாதனா பாடசாலையில் நடைபெற உள்ளது.

சகல சிற்றூர்தி உரிமையாளர்களையும் இக்கலந்துரையாடலுக்கு தவறாது சமுகம் தரும்படி தனியார் போக்குவரத்துப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

## புத்தாண்டில்

தூசுகி வீசி விட்டு அறைக்குள் போய்விட்டான், இனி மலருக்குத் தெரியும் தனது தம்பி திருந்தி விட்டான், ''புதுச்சட்டையைக் கழற்றி எறிவான்'' என்று. ஆம்! உள்ளே,'' வீட்டுத் தலையின் மேடையில் தான் இனி எனது புதுவருட அரங்கேற்றம்'' என்பதைச் செயலால் உணர்த்திக் கொண்டிருந்தான் சசி.

## மே தினஊர்வல ஏற்பாடுகள்

தொழிலாளர் தினமாகிய மே நாளை ஒடுக்கப்படும் மக்களது தேசிய எழுச்சி நாளாக விடுதலை உணர்வு மேலோங்கும் எழுச்சி நாளாக முன்னெடுப்பதற்கு தயாரிப்புகள் நடைபெற்றுவருகின்றன.

ஆங்காங்கே சுவரொட்டிகளும, பதாதைகளும் மக்களை எழுச்சிக்கு அழைக்கின்றன.

இப்முறை முன்னெப்போதுமில்லாதவாறு, மதம்சார் அமைப்புகளும் மேநாள் ஊர்வலத்தில் கலந்து கொள்ளுகின்றன. ஊர்வலப் பாதையின் பல இடங்களில் பந்கல்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

மேலும், சனசமூக நிலையங்கள் கிராமிய அபிவிருத்தி நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள் தேசிய உணர்வுகளை ஊர்திகளில் வடிவமைக்கின்றனர். ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் மக்களது அடிப்படைத் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

## மேதின ஏற்பாட்டு கூட்டம்

மே தின ஏற்பாடு தொடர்பாக செயற்பாட்டுக் குழுவினால் வலிகாமம் பிரிவில் நேற்று நாசம்ஸ் திரையரங்கில் சந்திப்பொன்று நடாத்தப்பட்டது.

இச்சந்திப்பில் சனசமூக நிலையங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள், மகளிர் மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட 200 க்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## அஞ்சல் அலுவலக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளது.

திருப்திகரமான அஞ்சற் சேவையை ஏற்படுத்த வேண்டிய ஆலோசனைகளைப் பெற்று அவற்றிற்கான செயற்பாடுகளை ஆராயும் பொருட்டு அஞ்சல் சேவையைச் சேர்ந்த சகல தரங்களிலும் உள்ள உத்தியோகத்தர்கள், உபஅஞ்சல் அதிபர்கள், ஊழியர்கள் பதிலாட்கள் ஆகியோர் அடங்கிய கலந்துரையாடலுக்கு சமுகம் தருமாறு யாழ் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

## தூதுக்குழுவுடன்

வார்த்தைகளின்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சில யோசனைகளை பௌத்தகுருமார் விடுதலைப் புலிகளிடம் முன்வைத்தனர் இந்த யோசனைகளைப் பரிசீலித்த பின் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள இரண்டாம்கட்ட பேச்சுக்களின்போது பதிலளிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இப் பேச்சுவார்த்தைகளின் போது பௌத்த தூதுக்குழுவின்சார்பில்கருத்துதெரிவித்த சித்தார்த்த மகாநாயக்கதேரோ இரு இனங்களுக்குமிடையே சமாதானமும் ஐக்கியமும் நிலவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அந்நிய ஏகாதிபத்திய ஆதிக்கமும் அதனைத் தொடர்ந்து இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பாரபட்சமான நடவடிக்கைகளுமே இன்றைய இனப்பிரச்சினைக்குக்காரணமென எடுத்துவிளக்கினார்.

காலம் காலமாகச் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததாக குறிப்பிட்ட அவர், மீண்டும் சகோதரத்துவமும் ஐக்கியமும் தழைத்தோங்க வேண்டுமென தெரிவித்தார். பௌத்த தத்துவம் சகோதரத்துவத்தையும் மனிதநேயத்தையும் போதிக்கிறது. பௌத்தத்தை மதமாக மதித்துவாழும் தமது குருமார் பௌத்த தர்மத்தின்படியே பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறது என மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சார்பில் கருத்து தெரிவித்த திரு அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மனித அன்பையும் அறத்தையும், மனித தர்மத்தையும் ஜீவகாருண்யத்தையும் போதிக்கும் பௌத்த மதத்தை தழுவிக் கொண்ட சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கு எதிராக அநீதியையும் அதர்மத்தையும் மனிதாபிமானமற்ற கொடுமைகளையும் கட்டவிழ்த்து வருவது மிகவும் வேதனைக்குரிய விடயம் எனகுறிப்பிட்டார்.

சிங்கள அரச பயங்கரவாதத்தின் எதிர் விளைவே தமிழ் மக்கள் மத்தியில் ஆயுதப் போராட்ட வடிவம் தோற்றம் கொண்டது தமிழரின் போராட்டம் தர்மத்தையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தகைமையற்ற

சில் ஆலோசனை கலந்த மூத்த கல்வி அதிகாரிகள், மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு வருடப் பயிற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க முடிவெடுத்துள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் பத்து விகிதத்தினர் சிங்கள மொழியில் தலா 20 புள்ளிக்குக் குறைவாகவே எடுத்துள்ளனர். இது மொழி கற்பிக்கும் ஆசிரியர்களால் ஏற்பட்டதுஎன்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் கடமைபுரியும் ஆசிரியர்களில் 45 விகிதமானோர் பயிற்றப் படாதவர்கள் என்றும், மொழிப் பாடங்களில் மாணவர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்குஆசிரியரைக் குறைகூறக்கூடாது என்றும் ஆசிரிய தொழிற்சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## அகதிகள்


டன் அனுப்பப்படுகிறார்களா? என்பது ஐ, நா. அமைப்பிற்கு தெரியாதுள்ளது ஆயினும் அவர்கள் இலங்கை திரும்பியதும் அவர்களுக்கு உதவ வேண்டும் எனபதே தமது விருப்பம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இலங்கை திரும்பிய அகதிகள் முகாம்களிலேயே வாழ்கின்றனர், ஒன்றில் அவர்களுடைய வீடுகள் தரை மட்டமாகியுள்ளன அல்லது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அவர்களது வீடுகள் இருப்பதால் அங்கு செல்லக் கூடாதென இராணுவம் தடுத்துள்ளது என பி. பி. சி தனது செய்தியில் தெரிவித்தது.

இதேவேளை இம் மாதம் 27ம் திகதி தொடக்கம் தமிழ் நாட்டிலிருந்து விமான மூலம் இலங்கை தமிழகதிகள் திருக்கோணமலை வரவுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வாரத்திற்கு நான்கு நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் மூன்று தடவைகள் இவர்கள் திருககோணமலைக்கு வரவுள்ளதாகவும் ஒவ்வொரு விமானத்திலும் 126 பேர் கொண்டு வரப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இம்மாதம் 25 ஆம், 29ஆம் திகதிகளில் தலா 500 பேர் மன்னாருக்கு கப்பல் மூலம் வரவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது



## மீன் பிடிக்க தடை

காத்தான்குடி எல்லைக்குட்பட்ட ஆற்றங்கரைகளிலும், வாவிகளிலும் மறு அறிவித்தல் வரை இரவு நேரத்தில் மீன் பிடிக்க வேண்டாமென்று சிறிலங்கா பொலிசார் மீனவர்களை கேட்டுள்ளனர்.

இந்த உத்தரவு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் இது மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்

## கொம்படி

பண்டிவிரிச்சான்மடுக்கோவில், கோபாலகிருஷ்ணன் (10 வயது), பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில், எ.அருமைத்துரை (36 வயது), சிற்றில்பந்தல், இளவாலை, கெ யோகதாஸ் (21 வயது), பேயிட்டி, இளவாலை, செ. வேல்முருகா (40 வயது), எள்ளுக்காடு, உருத்திரபுரம், ஆர் றமேஸ் (16 வயது), தாளையடி ஏ. சிவாநந்தன் (22 வயது) செல்வாநகர், கிளிநொச்சி ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலத்த சத்தத்துடன் வெடித்த இக்குண்டினால் மூன்று கடைகள் எரிந்து சாம்பலாகியதுடன் பலருடைய காது செவிடுஆகியுள்ளது என தெரியவருகிறது.

## பௌத்த

தர இணைப்புப் பற்றி முடிவு எடுக்கப்பட வேண்டும்

6. பிரதேச சபை பொருளாதார அபிவிருத்திக்கென வெளிநாட்டு உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. ரூபவாகினி, வானொலி சேவைகள் பிரதேச ரீதியாக அமைக்கப்பட வேண்டும்.
8. பிரதேச பொலிஸ் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதில் சகல பிரஜைகளும் கலந்து கொள்ள வாய்ப்புஅளிக்கப்படவேண்டும்.
9. வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஓர் சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கப்பட வேண்டும்.


## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பேரம்பலம்

மண்கும்பானை பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா பேரம்பலம் என்பவரது ஈமக்கிரியை நேற்று தவிர்க்க முடியாததன் காரணமாக நடைபெறவில்லை அன்னாரின் ஈமக்கிரியை இன்று பி. ப. 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- தகவல்
(2499) பிள்ளைகள்

### வேலாயுதபிள்ளை சிவராமலிங்கம்

(பிரபல ஆயுர்வேத வைத்தியர்)

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர், வேலாயுதபிள்ளை சிவராமலிங்கம் 23.04 92 இல் காலமானார். அன்னார் பிரபல வைத்தியர் வேலாயுதபிள்ளையின் அன்பு மகனும், ஜெகதாம்பிகையின் அன்புக் கணவரும், இந்திராணியின அன்புச் சகோதரனும், பரமசாமியின் (உதவி முகாமையாளர், இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்.) அன்பு மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 24. 04. 92 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பி ப 3.00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி (முடமாவடி) - தகவல்
திருநெல்வேலி கிழக்கு அன்பு மனைவி
(2498)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.